உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-7 இதழ்-185

ஜனவரி 1-15 2025




## அப்பைய தீட்சிதர் நடராஜருடன் ஒன்றுகலந்த

# சிதம்பரம் கோவிலில் மர்மம் சுவர், அறை

# திருச்சூர் வடக்குநாதரும் விசேஷ நடைமுறையும்

திருச்சூரில் பூரம் திருவிழா மிகவும் சிறப்பு. ஆனால், அத்திருவிழா வடக்குநாதருக்கு மட்டும் நடத்தப்படுவதில்லை.

இக்கோயிலுக்கு எதிரில் உள்ள பாரமேட்டு காவு பகவதியும், திருவெம்பாடி பகவதியும் வடக்குநாதரை பார்க்கும் நாள் தான் திருச்சூர் பூரம் திருவிழா என்கிறார்கள்.சிவராத்திரி காலங்களில் கோயிலை சுற்றி லட்ச தீபம் ஏற்றப்படுகிறது. இத்தலத்தில் உள்ள லிங்கம் முழுவதும்நெய்யால் ஆனது. அமர்நாத் லிங்கத்தை ‘‘பனி லிங்கம்’’ என அழைப்பதைப் போல் இத்தல சிவனை ‘‘நெய்லிங்கம்’’ என அழைக்கிறார்கள்.



இத்தல ஈசனை தரிசித்தபின் முன் வாசலை அடைந்து இரு கால் பாதங்களை திருக்கோயிலின் சுவர் மீது மூன்று முறை தட்டி அப்பனே வடக்கு நாதரே இக்கோயிலிலிருந்து நான் ஒன்றும் எடுத்து செல்லவில்லை, வடக்கு நாதரின் அருளோடு மட்டும் திருப்தியுடன் செல்கிறேன் என்று கூறி வெளிவரவேண்டும்.

சிவசொத்து குலநாசம் என்று கூறு வதற்கேற்ப, வடக்குநாதர் சிவஸ்தலத்தை வலம் வரும்போது, மண், தூசு கூட தெரியாமல்கால் பாதங்களில்ஒட்டிக் கொண்டு, அதை கோவிலி லிருந்து எடுத்துச் செல்லவில்லை என்பதை தெரி விப்பதற்காகவே முற்காலத்தில் இந்த நடைமுறை கடைபிடிக்கப் பட்ட தாக கூறப்படுகிறது.

# முற்பிறவி பாவம் போக்கும் ஊட்டத்தூர் ஸ்தலம்

திருச்சி மாவட்டம் ஊட்டத்தூரில் அமைந் துள்ள அருள்மிகு சுத்த ரத்தினேஸ்வரர் ஆலயம் மிகவும் சிறப்பு பெற்ற ஆலயமாகும்.

ஊழ்வினை என்று கூறப்படும் முற்பிறவி யில் நாம் செய்த செயலுக்குத்தான்தற்போது நமக்கு பலவித சோதனைகளும், துன்பங்களும் வாழ்க்கையில் ஏற்படுகின்றன. அவற்றைப் போக் கிக்கொண்டு நல்வாழ்வு பெற நினைப்பவர்கள் இத்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை அவசியம் தரிசிக்க வேண்டும்.




பிராகாரத்திற்குள், அழகாக நிர்மாணிக் கப்பட்டுள்ள இத்திருக்கோயிலில் விநாயகப் பெருமான், தட்சிணாமூர்த்தி, சூரிய பகவான், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர், அறுபத்துமூன்று நாயன்மார்கள், அதிகாரநந்தி, ஆகியோரும் அழகாக எழுந்தருளியுள்ளனர். இவை அனைத்தும் பல்வேறு கோவில்களில் கண்டிருப்போம் ஆனால், இந்த கோயிலில் உள்ள துர்க்கை கோரைப்பற்கள் வெளியில் தெரியுமாறு காட்சி அளிப்பது இத்தலத்தின் சிறப்புகளில் ஒன்றாகும்.

உற்ற துணை யும், பெற்ற தாயும், வளர்க்கும் தந்தையும், கல்வி புகட்டும் ஆசானுமாக இருந்து ஒவ்வொரு விநாடியும் நம்மைக் காத்தரு ளும் ஊட்டத்தூர் அகிலாண்டேஸ்வரி சமேத சுத்தரத்தினேஸ்வரரை ஒருமுறையாவது தரிசித்தால் முற்பிறவி பாவங்கள் தீரும், துன்ப மில்லா வாழ்வு அமையும்.


e-magazine
aanmeegamalar.com

# அமா சோமாவரமும்

# அரசமரத்தின் பலன்களும்

e-magazine
aanmeegamalar.com



திங்கட்கிழமையில் வரும் அமாவாசையை ''அமா சோம வாரம்'' என்று போற்றுவர்.

அன்றுவிரதம் கடைப் பிடித்து அரச மரத்தை வழிபட்டால் கிடைக்கும் பலன்கள் ஏராளம் என்று சொல்கின்றன சாஸ்திர நூல்கள்.

அரச மரம் இருக்கும் இடத்தில் மும்மூர்த்திகள் வாசம் செய்வதாக நம்பப்படுகிறது.

மும்மூர்த்தி வடிவம் கொண்ட அரச மரத்தின் அடிப்பக்கம் பிரம்மா, நடுமரம் விஷ்ணு, கிளைகள் கொண்ட மேற்பாகம் சிவன் என்பர். இம்மரம் மகாவிஷ்ணுவின் வலது கண்ணிலிருந்து தோன்றியது.

எனவே இந்த மரத்தை எக்காரணத்தைக் கொண்டும் வெட்டுவதும், அதன்மேல் ஏறுவதும், கிளைகளை ஒடிப்பதும் தகாத செயல்கள் ஆகும்.

அப்படிச் செய்தால் எதிர்பாராத விபத்து, வறுமை, துன்பங்கள் ஏற்படும் என்பர்.

அரச மரத்திற்கு ''அஸ்வத்தா' என்ற பெயரும் உண்டு...

அஸ்வத்தா என்றால், ''வழிபடுபவர்களின் பாவத்தை மறு நாளே தீர்ப்பது'' என்று பொருள் சொல்லப்படுகிறது.



aanmeegamala

இந்த அரச மரத்தை திங்கட் கிழமையில் வரும் அமாவாசையன்று விரதம் கடைப்பிடித்து வழிபட்டால் வாழ்வில் வசந்த ராகம் பாடும்; வளமான வாழ்வு கிட்டும். காலை வேளையில் குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதிகள் நூற்றியெட்டு முறை வலம்வந்து வணங்கினால் குழந்தை பாக்கியம் கிட்டும்.

மழலைச்செல்வம் கேட்க அரசமரவழிபாடு போல் வேறு எதுவும் இல்லை, அரசமர நிழல் படுகின்ற நீர்நிலைகளில் வியாழக்கிழமை அன்றும் அமாவாசை அன்றும் நீராடுவது திரிவேணிசங்கமத்தில் நீராடுவதற்குச் சமம்.

சோமவார அமாவாசை நன்நாளில் அரச மரத்தை 108 பிரதக்ஷிணம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு பிரதக்ஷண முடிவில் ஒரு பழமோ இனிப்போ சமர்ப்பிக்க வேண்டும் பிறகு பூஜை முடிந்தவுடன் தூப தீபம் காட்டி பூஜை செய்துவைத்தவருக்கும் நம்மால் முடிந்தவரை தக்ஷிணைக் கொடுக்க வேண்டும்.

இதுபோல் சோமவார அமாவாசை விரதம் மூன்றாண்டுகளாவது செய்ய கைமேல் பலன் கிடைக்கும் பித்ருக்களை வழிபட்டு அவர்கள் ஆசிகள் பெற சோமவார அமாவாசை மிகசிறந்த நாள்.

வடநாட்டில் அரசமரத்தை வெள்ளை நூலினல் 108 சுற்று சுற்றி வருவார்கள்.

**“ஆயுர்விருத்தி பகவத் தஸ்யவர்த்தந**
**தேஸர்வ ஸம்பத்’**

– என்று பத்ம புராணம்சொல்கிறது.

அரச மரத்தைப் பார்த்ததும் வணங்கியவருக்கு ஆயுள் வளரும்; செல்வவளம் பெருகும். கோவில்களில் உள்ள அரச மரத்திற்கு இன்னும் அதிகமான சக்திஉண்டு.

இந்த அரச மரத்தடியில் விநாயகப் பெருமான் எழுந்தருளியிருப்பார். அத்துடன் நாகர் சிலைகளும் அங்கு இருக்கும். இதனால் இது தோஷ நிவர்த்தி மரமாகவும் கருதப்படுகிறது.

அரச மரத்தை காலை வேளையில் ஏழுமணிக்குமுன் வலம் வருவது சிறப்பிக்கப் படுகிறது. சனிக்கிழமை தவிர மற்ற நாட்களில் மரத் தைத் தொடக்கூடாது.

சனிக்கிழமையன்று அரச மரத்தடியில் ஸ்ரீலட்சுமி வாசம் செய்வதாக ஐதீகம்.

அரச மரத்தைச் சுற்றும்போது கீழ்க்கண்ட சுலோகத்தைச் சொல்லிக்கொண்டே வலம் வந்தால் கூடுதல் பலன் கிட்டும்.

**“மூலதோ. ப்ரும்மரூபாய**
**மத்யதோ விஷ்ணு ரூபிணே**
**அக்ரத் சிவரூபாய வ்ருக்ஷ ராஜாயதே நம!’.**

# ஸ்ரீரங்கநாதரை சிவ சின்னம் அணியவைத்த அப்பைய தீட்சிதரின் பக்தி



ஒரு முறை ஸ்ரீரங்கம் சென்ற போது அவரைக் கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கவில்லை. ஹரியும் ஹரனும் ஒன்றே, சிவ வைஷ்ணவ பேதம் கூடவே கூடாது என்று சொல்லிப் பார்த்தார் தீக்ஷிதர். ஆனால் கோவில் அர்ச்சகர்கள் இவரது வாதத்தை ஏற்கவில்லை. உடனே திருமாலை சிவனாக எண்ணி இவர் பாடலானார். உடனே திருமாலே சிவச் சின்னங்களுடன் அங்குள்ள வைணவர்களுக்குக் காட்சியளிக்க அனைவரும் தீக்ஷிதரது மேன்மையை உணர்ந்து அவரை கோவிலுக்குள் மரியாதையுடன் அழைத்துச் சென்று கௌரவப்படுத்தினர்.

சென்னையில் அவர் வந்து சில காலம் தங்கி இருந்தார். அவர் தங்கி இருந்த இடம் வேத ஸ்ரேணி. இப்போது அது பெயர் மருவி வேளச்சேரி ஆகி விட்டது.

அங்கு கருணாம்பிகை சமேத தண்டீஸ்வரர் ஆலயத்தின் அருகே ஒரு குளத்தை வெட்டினார். அங்கு அம்மனின் காலடியில் ஸ்ரீசக்ரத்தையும் ஸ்தாபித்தார். அவர் அமைத்த குளம் அப்ளாங்குளம் என்று பெயர் மருவி இன்று ஐஐடி காம்ப்ளெக்ஸில் உள்ளது.

ஒருமுறை காஞ்சிபுரத்தில் இவர் செய்த யாகத்தில் அந்நாளைய வழக்கப்படி 17 ஆடுகளை பலி கொடுத்தார்.

இதில் அவருக்கு விருப்பமில்லை என்றாலும் மற்றவர்கள் கேட்டுக் கொண்டதால் இந்த பலி கொடுக்கும்படி ஆனது.

இதைக் கண்டித்து அங்கு வந்த சில அறிஞர்கள் இவருடன் வாதம் செய்தனர்.

உயிர் இழந்த ஆடுகள்

e-magazine
aanmeegamalar.com

புனித யாகத்தின் விளைவாக சொர்க்கத்தைத்தான் அடைந்து இருக்கின்றன என்று அப்பையர் கூறினார்.

கடுமையான வாதத்தில் அப்பையர் வென்றாலும், ஆடுகள் யாகத்தில் பலியானது அவருக்கு உறுத்தலை தந்தது. எனவே தனது ஆன்மபலத்தால் ஆடுகளின் நிலையை நோக்கினார்.

அப்போது அவை மாலைகள் அணிந்து சொர்க்கம் புகுவதைக் கண்டார். தான் மட்டும் இல்லாது, தன்னுடன் வாதம் செய்த அத்தனை பேரையும் அந்தக் காட்சியை காணும்படிச் செய்தார்.

அவரைத் திட்டிய அத்தனை பேரும் மனம் திருந்தி இவரை வணங்கினர்.

சின்ன பொம்ம நாயக்கரின் அரசவையில் அரசர் உள்ளிட்ட யார் வந்தாலும், வணங்கினாலும் தமது இடது கரத்தை தூக்கியே ஆசீர்வதிப்பார்.

இது அவரின் எதிரிகளுக்கு எரிச்சலை தந்தது.

அரசரிடம் இது பற்றி புகார் தெரிவித்ததுடன், அப்படிச் செய்வது மற்றவர்களை அவமதிப்பதுபோல் ஆகும் என்றும் கூறினர்.

இது குறித்து விசாரணையும் வந்தது. சகல சாஸ்திரங்களிலும் புலமை கொண்ட அப்பையர், 'வேத வேதாந்த விஷயங்களில் புலமை கொண்ட, ஆச்சார அனுஷ்டானங்களில் சிரத்தை கொண்ட, ஒரு உண்மையான பிராமணனின் வலது கரத்தில் அக்கினி வசிப்பார் என்பது வேதம் சொல்லும் உண்மை. எனவேதான்தான் வலது கரத்தால் ஆசீர் வதிப்பதில்லை என்றும், அவ்வாறு வலக்கரத்தால் ஆசீர்வதித்தால் அவர்கள் எரிந்து போவார்கள்' என்றும் கூறினார்.

இது பொய் என்று அவரது எதிரிகளால் சொல்லப் பட்டது. இதனால் அதை மெய்ப்பிக்க வேண்டிய நிலைக்கு அப்பையர் வந்தார்.

அரசர் உருவம் வரையப்பட்ட துணியை தமது வலது கரம் தூக்கி அவர் ஆசீர்வதித்தார்.

அவ்வளவுதான் அந்த துணி திகுதிகுவென எரியத்தொடங்கியது. அரசர் உள்ளிட்ட அனைவரும் அவரிடம் மன்னிப்புக்கோரி தீயை அணைக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

ஒரு முறை சின்ன பொம்ம நாயக்கர் விலை உயர்ந்த சால்வையை தீட்சிதருக்கு அணிவித்தார்.

மறுநாள் யாகத்தில் அந்த சால்வையை ஸ்ரீநடராஜ ருக்கு ஆகிருதியாக அக்னி குண்டத்தில் போட்டார்.

மன்னரை அவமதித்ததாக சொல்லி மன்னர் முன் நிறுத்தப்பட்டார். மன்னர் ஏன் இப்படி சால்வையை தீயில் போட்டீர்கள்

என்னை அவமானப்படுத்தும் செயலில் ஈடுபட் டீர்கள் என்றார்.

அதற்கு தீட்சிதர்

அந்த சால்வை என்னிடம் இருப்பதை விட சிதம்பரம் ஸ்ரீ நடராஜபிரானிடம் இருப்பதே மேல் என நினைத்து அவருக்கு அனுப்பிவிட்டேன் என்றார்.

நீங்கள் வேண்டுமானால் போய் சிதம்பரத்தில் பாருங்கள் என்றார்.

மறுநாள் காலை சிதம்பரம் சென்றார் மன்னர்.

கோவிலை திறந்த தில்லை வாழ் தீட்சிதர்கள்

இறைவனின் மேல் சால்வை இருப்பதை கண்டு அதிர்ந்தனர்.

மன்னரும் அந்த சால்வையை கண்டு அதிர்ந்தார்.

ஊர் திரும்பிய மன்னர் அப்பைய தீட்சிதரின் கால்களில் வீழ்ந்து நமஸ்கரித்தார்.

வாழ்நாள் எல்லாம் சிவப்பணி செய்து வாழ்ந்த இந்த மகான், தில்லை சிவபெருமானோடு கலந்து மோட்சம் அடைந்தார். சைவசமயம் வளர்ச்சிக்கும் மக்களின் ஆன்மிக வழிப்பாட்டிற்கும் பாடசாலை



அமைத்து ஆன்மிக நூல்களையும் வழங்கி சேவை செய்த அப்பைய தீட்சிதர் இந்து மதத்தின் மாணிக் கக் கல் என்றே போற்றப்படுகிறார்.

அவர் மஹாவிஷ்ணுவிடம் தனக்குள்ள பக்தியைக் காண்பிக்கும் வண்ணம் வரதராஜ ஸ்தவம் என்ற நூலை இயற்றினார். அவரது அபீதகுசாம்பாள் ஸ்தோத்திரம் அவருக்கு தேவியிடம் உள்ள பக்தியைக் காண்பிக்கிறது.


சூரியனிடம் உள்ள பக்தியினால் ஆதித்ய ஸ்தோத்ர ரத்தினத்தை அவர் இயற்றினார்ஆதிசங்கர பகவத்பாதாளின் பிரம்மசூத்ர பாஷ்யத்திற்கு வாசஸ்பதி மிஸ்ரர் என்பவர் இயற்றிய பாமதி என்ற உரை மிகவும் போற்றப்படும் ஒரு உரையாகும். அதற்கு அமலானந்தர் என்பவர் கல்பதரு என்ற சற்று கடினமான ஒரு உரையை எழுதியுள்ளார். இந்த

ஆன்மிகமலர்.காம்

கல்பதருவை அனைவரும் புரிந்துக் கொள்ளும் வகையில் எளிதாக்கி அப்பைய தீக்ஷிதர் பரிமளம் என்ற ஒரு உரையை எழுதினார். இது மிகவும் பிரசித்தி பெற்ற நூலாகும். வயதான காலத்தில் ஒரு நாள் அவர் சிதம்பரம் நடராஜரை தரிசிக்கச் சென்று பஞ் சாக்ஷரத்தை ஜபித்தவாறே படியேறியதை கோவில் தீக்ஷிதர்கள் பார்த்தனர். அன்று சைத்ர பூர்ணிமை. காலை முதல் முகூர்த்தம். நடராஜரின் கற்பூர நீராஜன சமயம். அப்போது அவர் சந்நிதியில் அப்படியே நடராஜரோடு ஐக்கியமானதை அவர்கள் கண்டனர்.

அப்போது அவர் கூறிய ஸ்லோகம்:

**ஆபாதி ஹாடகஸபா நடபாத பத்ம**
**ஜ்யோதிர்மயோ மனஸிமே**
**தருணாருணோஓ(அ)யம்**




இதன் பொருள்: வானில் பொன் ஒளியோடு சூரியன் திகழ்வதைப் போல நடராஜரின் திவ்ய பொற்றாமரையின் அழகு என் கண்ணைப் பறிக்கிறதுஞ்.” இப்படி பாதி ஸ்லோகம் சொல்லும் போதே அவர் நடராஜருடன் கலந்தார். இதன் மீதி பாதியை அவரது சகோதரரின் பேரனான நீலகண்ட தீக்ஷிதர் பின்னால் நிறைவு செய்தார்.

அப்பைய தீக்ஷிதர் 1593ஆம் ஆண்டு 73ஆம் வயதில் நடராஜருடன் கலந்தார். இவரது அதிஷ்டானம் கும்பகோணம் மயிலாடுதுறை சாலையில் உள்ள திருவாலங் காட்டில் காவிரிகரையில் உள்ள விநாயகர் கோவில் முன் அமைந்துள்ளது.

தீட்சிதருடைய கடைசி காலத்தில் அவருக்கு ஒருவித வயிற்று வலி (சூலை நோய்) அவரை மிகவும் வாட்டி வதைத்தது. அவர் சிறந்த யோக சக்திகள் உடையவராதலால், தியானம் செய்யவோ அல்லது யாராவது முக்கியப் பட்டவருடன் பேச வேண்டியிருந் தாலோ, ஒரு தர்ப்பை புல்லை அருகே போட்டு, அந்த புல்லின் மேல் அந்த வலியை தன் தவ சக்தியால் இறக்கி வைத்துவிட்டு, தன் வேலையில் ஈடுபடுவாராம்...!

அந்தப் புல் அது பாட்டுக்கு இப்படி அப்படி என்று துள்ளிக்கொண்டே இருக்குமாம். பிறகு வேலை முடிந்தவுடன் புல்லிடமிருந்து அந்த வலியை திரும்ப தனக்குள் வாங்கிக் கொள்வாராம்.

ஒரு சமயம் அவர் ஒரு பண்டிதருடன் வாதத்தில் ஈடுபட நேர்ந்தபோது, வழக்கம் போல, தமது வலியை தற்காலிகமாக தர்ப்பை புல்லின் மேல் இறக்கி வைத்துவிட்டு வாதம் புரியலானார்.

புல்லும் அது பாட்டுக்கு துள்ள ஆரம்பித்தது. ....ஒரு கட்டத்தில் வாதம் மிகவும் தீவிரமடைய, உட்கார்ந்திருந்த இருவரும் நின்றுகொண்டு வாதம் புரியலாயினர். புல் துள்ளுவது அதிகரித்து , சற்று உயரமாகவே துள்ள ஆரம்பித்தது.

இதை ஆச்சரியத்துடன் கண்ணுற்ற அந்த பண்டிதர் தீட்சிதரிடம், “இவ்வளவு தவ வலிமை கொண்ட நீங்கள் ஏன் நிரந்தரமாக அந்த வலியை போக்கிகொள்ளக்கூடாது? எதற்கு புல்லின் மீது இறக்கி வைத்துவிட்டு திரும்பவும் ஏற்றுக் கொள்கிறீர்கள்?” என்று கேட்டார்.

“இந்த வயிற்று வலி என் கர்ம வினையால் எனக்கு வந்தது... நமது முந்தைய செயல்களினால் ஏற்படும் கர்ம வினையை எப்படியும் அனுபவித்துத் தான் ஆகவேண்டும். ....அதிலிருந்து தப்பிக்க எண்ணக் கூடாது. முற்பிறப்பில் நான் செய்த சிறு பாவத்தின் பலன் தான் இந்த சூலை நோய். ..! இப்போது நான் இதை அனுபவிக்கவில்லை எனில், இதை அனுபவிப்பதற்காக இன்னொரு பிறவி எடுக்க நேரிடும்! அதற்காகத்தான் புல்லின் மீது இறக்கிவைத்து விட்டு திரும்பவும் ஏற்றுக் கொள்கிறேன்!” என்றாராம். இவர் எழுதிய மிகப் பிரபல மான மார்க்கபந்து ஸ்தோத்ரம் வேலூர் பக்கத்தில் உள்ள விரிஞ்சிபுரம் மார்க்கபந்தீஸ்வரர் ஆலயத்தில் எழுதப்பட்டது.

## சிதம்பரம் கோவிலில் மர்மம் சுவர் மற்றும் அறை

சிதம்பரம் அண்ட் நடராஜா (Chidambaram and Nataraja – B.G.LSwami) என்ற ஒரு அருமையான ஆய்வு நூலை பி.ஜி.எல்.ஸ்வாமி என்பவர் எழுதியுள்ளார். அதில் எட்டாம் அத்தியாயத்தில் நந்தனார், மாணிக்க வாசகர், அப்பைய தீக்ஷிதர் ஆகியோர் சித்அம்பரத்தில் நுழைந்து திரும்பி வரவில்லை என்ற செய்தி பதிவு செய்யப்படுகிறது. சிதம்பரம் நடராஜருக்குப் பக்கத்தில் ஒரு சுவர் எழுப்பப்பட்டுள்ளது. அங்கு ஒரு ரகசிய அறை இருக்கிறது. நடராஜர் வழிபாட்டுடன் இணைந்துள்ள தஹர வித்யா அல்லது தஹரோபாசனா மூலம் அவர்கள் இறைவனுடன் ஒன்றி விட்டனர். இதன் விளக்கம், அறை எங்குள்ளது என்பன போன்ற விவரங்கள் அந்தப் புத்தகத்தில் உள்ளது.

e-magazine
aanmeegamalar.com

# பாவங்களை போக்கும்

## ஐப்பசி மாத காவிரி நீராடல்



துலாமாதமான ஐப்பசியில் உலகிலுள்ள அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும் காவிரியில் சங்கமமாகின்றன என்பது ஐதீகம்.

ஐப்பசி மாதத்தை துலா மாதம் என்றுபோற்று வார்கள். இந்த மாதத்தில் ஐப்பசி அன்னாபிஷேகம், தீபாவளி, கந்தசஷ்டி உள்ளிட்ட பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. ஐப்பசி மாதத்தில்காவி ரியில் நீராடுவது மகா புண்ணியம் என முன் னோர்கள் கூறியுள்ளனர். ஐப்பசி மாதம் முழு வதும் உலகில் உள்ள அனைத்து புண்ணிய தீர்த்தங்களும் காவிரி நதியில் கலப்பதாக ஐதீகம். இந்த மாதத்தில் காவிரியில் புனித நீராடுவதால் புண்ணியம் அதிகரிக்கும்.

ஐப்பசி மாதத்தில் காவிரியில் நீராடுவதை துலா ஸ்நானம் என்று விவரிக்கிறது புராணம். ஐப்பசி மாதத்தில் ஒரு நாளாவது காவிரியில் நீராட வேண்டும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். ஐப்பசியில் துலா ஸ்நானம் செய்வதால் நரம்பு தளர்ச்சி பிரச்சினைகள் நீங்கும். நோய்கள் கடந்து ஓடிப்போகும், காவிரியில் நீராடும் போது ஆத்ம பலம் தேக பலம் கிடைக்கும் என்பது நிரூபிக் கப்பட்ட உண்மையாகும்.

ஐப்பசி மாதம் தமிழ் மாதங்களில் சித்திரை தொடங்கி 7வது மாதமாகும். இந்த மாதத்தில் சூரியன் துலாம் ராசியில் சஞ்சரிப்பார். சித்திரை மாதத்தில் உச்சமடையும் சூரிய பகவான், ஐப்பசி மாதத்தில் நீச்சமடைகிறார். இதனால் இந்த மாதத்தில் சூரிய வெப்பத்தின் தாக்கம் பெரு மளவு குறைந்து குளிர்ந்த சீதோஷ்ண நிலை நிலவும். இதனை அறிந்தே நம் முன்னோர்கள் பருவகால நிலைகளை நான்கு பிரிவுகளாக பிரித்து வைத்துள்ளனர்.




சித்திரை மழை பேய்ஞ்சு கெடுக்கும், பெய்யாமலும் கெடுக்கும் என்பது போல், ஐப்பசி மாதம் அடைமழை காலத்தின் தொடக்க காலம் என்றும், வடகிழக்கு பருவமழை தொடங்கும் மாதம் என்றும் நம் சித்தர்கள் கணித்து கூறியுள்ளனர். ஐப்பசி மாதத்தில் அனைத்து புண்ணிய நதிகளும் காவிரியில் சங்கமிப்பதாக ஐதீகம். இதனால் இம்மாதம் முழுவதும் காவிரி நதி பாய்ந்தோடும் அனைத்து இடங்களிலும் மக்கள் நீராடுவது வழக்கம். மற்ற மாதங்களில் காவிரியில் நீராட முடியாவிட்டாலும் கூட ஐப்பசி மாதத்தில் ஒரே ஒரு நாளாவது நீராடுவது சிறப்பாகும்.

ஐப்பசி மாதத்தில் பிறக்கக்கூடிய ஆண் குழந்தைகளுக்கு உபேந்திரன் என்றும் பெண் குழந்தைகளுக்கு சந்திரவதி என்றும் பெயர் வைக்கலாம். அழகு, ஆரோக்கியம், கல்வி, செல்வ வளம், வலிமை, சந்தான பாக்கியம் ஆகியவற்றை இந்த துலா ஸ்நானம் தருவதாக கருதப்படுகிறது. குறிப்பாக ஐப்பசி மாத கடைசி நாளன்று மயிலாடுதுறையில் காவிரி நீராடல் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதனை காவிரி கடை முழுக்கு என்றழைக்கின்றனர்.

ஐப்பசி மாதத்தில் ஏதாவது ஒரு நாளன்று ஸ்ரீரங்கம் சென்று காவிரியில் நீராடி ஸ்ரீரங்கநாதர் மற்றும் ஸ்ரீரங்கநாயகி, ஆண்டாள் தாயாரை வழிபட்டால் வாழ்வில் சகல பாவங்களும் நீங்கும். சுக்கிர தோஷம் உள்ளவர்கள் இங்கு நீராடி ஸ்ரீரங்கநாதரையும் தாயார்களையும் வழிபட்டால்

கடன் பிரச்சனைகள் தீரும், பொருளாதார நிலையும் மேம்படும். மேலும் திருமணமாகாதவர்களுக்கு பிடித்தமான மனதிற்கினிய வாழ்க்கைத் துணை யும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

ஐப்பசி மாதம் பண்டிகைகளும் கொண் டாட்டங்களும் நிறைந்த மாதம். இந்த மாதத்தில் தான் நவராத்திரி, தீபாவளி பண்டிகை கொண் டாடப்படுகிறது. கந்த சஷ்டி திருவிழாவும் நடை பெறுகிறது. ஐப்பசி பவுர்ணமியில் அன்னாபிஷேகம் நடைபெறும்.

புரட்டாசி மாதம் பெருமாளுக்கு உகந்தது போல், இந்த ஐப்பசி மாதம் சிவபெருமானுக்கும், முருகப்பெருமானுக்கும் உகந்த மாதமாகும். முருகப்பெருமான், தீமையின் உருவமாக விளங் கிய சூரபத்மனை சம்ஹாரம் செய்து வெற்றி பெற்று ஆட்கொண்டதன் அடையாளமான கந்த சஷ்டி விழா கொண்டாடப்படுவதும் இம்மாதத்தில் தான்.

நம்மிடம் உள்ள தீயகுணங்களான ஆணவம், மாயை, கன்மம், காமம், பேராசை, செருக்கு, மயக்கம், தற்பெருமை ஆகியவற்றை விடுத்து ஆற்றல், தன்வயமுடைமை, இயற்கை உணர்வு, பேரருள் ஆகிய நற்குணங்களைப் பெறும் நோக்கில் இவ்விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது

எல்லா முருகன் கோவில்களிலும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இவ்விரத முறையில் சிலர் ஆறுநாட்கள் உண்ணாமலும், ஒருவேளை உணவு உண்டும், சஷ்டி அன்று மட்டும் உண்ணாமலும் விரதம் மேற்கொள்கின்றனர். ஒரு சிலர் ஆறு மிளகை வாயிலிட்டு ஆறு கை நீரருந்தியும், ஒரு சிலர் மௌன விரதம் இருந்தும் இவ்விரதத்தைக் கடைப்பிடிக்கின்றனர். இவ்விரத முறையால் உடல் மற்றும் உள்ளத்தூய்மை கிடைக்கும். நோய்கள் நீங்கும். பிள்ளைப்பேறு கிட்டும். சஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பது கந்த சஷ்டி குறித்த பழமொழியாகும். இந்த விரதத்தினை ஒப்பரும் விரதம் என்று கந்த புராணம் குறிப்பிடுகிறது.

ஐப்பசி மாத பவுர்ணமி நாளில் சிவாலயங்களில் சிவபெருமானுக்கு செய்யப்படும் அன்னாபிஷேகத்தை கண்குளிர தரிசித்தால் கோடி புண்ணியம் கிட்டும். பல்வேறு சிறப்புகள் நிறைந்த இந்த ஐப்பசி மாதத்தில் ஒருநாளாவது காவிரியில் நீராடுங்கள் ஆயுள் ஆரோக்கியம், காவேரி நதிக்குப் பூஜை செய்து வழிபடுவதுடன், அருகில் அரசமரம் இருந்தால் அதற்கு நீர் வார்த்து,



அதை வலம்வந்து வணங்குவது புண்ணிய பலன் தரும். மேலும், காவேரிக் கரையில் கோமாதா பூஜை செய்தால் மேன்மேலும் புனிதம் கிட்டும். முரன் முதலான அசுரர்களை அழித்ததால் மகாவிஷ்ணுவிற்கு வீரஹத்தி தோஷம் பற்றியது. இதனைப் போக்க, காவேரியில் ஐப்பசி மாதம் நாக சதுர்த்தியன்று துலா ஸ்நானம் செய்து, தோஷம் நீங்கப் பெற்றார் என்று துலாக் காவேரி மகாத்மியம் கூறுகிறது.

ஐப்பசி மாதப்பிறப்பிலிருந்து, ஐப்பசி மாதம் முழுவதும் துலாமாதம் எனப்படும். அந்தக் காலங்களில் சூரியோதயத்தில் செய்யும் புனித ஸ்நானம் துலா ஸ்நானம் என்று சொல்லப்படும். தஞ்சை மாவட்டத்தில் அதனை துலா காவேரி ஸ்நானம் என்று அழைப்பார்கள். காவேரி நிரம்பி வழியும் காலம் ஆதலால், காவேரிக் கரை யிலுள்ள புனித இடங்களில் பக்தர்கள் ஸ்நானம் செய்து அருகிலுள்ள கோயில்களில் தரிசனம் செய்வது வழக்கம். மாயவரம், கும்பகோணம், ஸ்ரீரங்கம், திருவையாறு போன்ற இடங்களிலும், காசி, இராமேஸ்வரம் போன்ற இடங்களில் தீர்த்தக் கட்டங்களிலும், புனித ஸ்நானம் செய்வது மிகவும் விசேஷமாகக் கருதப்படுகிறது. புண்ணியத்தை நாடும் பக்தர்கள் ஐப்பசி மாதம் முழுவதும் துலா ஸ்நானம் செய்வார்கள். கடைசிநாள் முடவன் முழுக்கு என்று விசேஷமாக ஸ்நானம் செய்வதுண்டு. கடைமுகம் என்றும் அழைப்பதுண்டு.

# 2025-ஆம் ஆண்டு

# தைமாத ராசிபலன்கள்

2025 ஆம் ஆண்டின் தை மாதம் (ஜனவரி 14, 2025 பிப்ரவரி 12, 2025) 12 ராசிகளுக்கும் பல்வேறு அனுபவங்களை வழங்குகிறது. கீழே ஒவ்வொரு ராசிக்கும் பொதுவான பலன்கள் வழங்கப்பட்டுள்ளன:

## மேஷம்

- புதிய வாய்ப்புகள் கிடைக்கும்; உழைப்பால் முன்னேற்றம் காணலாம்.
- வருமானம் அதிகரிக்கும்; செலவுகளை கட்டுப்படுத்துவது முக்கியம்.
- சமரசம் மற்றும் ஒற்றுமை நிலவும்.

## ரிஷபம்

- தொழிலில் முன்னேற்றம்; புதிய திட்டங்களில் ஈடுபாடு.
- நிதி நிலைமை மேம்படும்; சேமிப்பு அதிகரிக்கும்.
- உறவுகளில் மகிழ்ச்சி; புதிய உறவுகள் உருவாகலாம்.

## மிதுனம்

- சவால்கள் எதிர்கொள்ளலாம்; பொறுமையுடன் செயல்படுவது அவசியம்.
- செலவுகள் அதிகரிக்கும்; திட்டமிட்ட செலவுகள் அவசியம்.
- சில மனக்கசப்புகள் ஏற்படலாம்; பேசுவதில் கவனமாக இருக்கவும்.

## கடகம்


- தொழிலில் முன்னேற்றம்; புதிய பொறுப்புகள் கிடைக்கும்.
- வருமானம் அதிகரிக்கும்; முதலீடுகள் லாபமாக இருக்கும்.
- குடும்பத்தில் மகிழ்ச்சி; உறவுகள் வலுப்படும்.

## சிம்மம்

- புதிய வாய்ப்புகள்; உழைப்பால் முன்னேற்றம்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!






- நிதி நிலைமை மேம்படும்; சேமிப்பு அதி கரிக்கும்.
- உறவுகளில் ஒற்றுமை; புதிய உறவுகள் உருவாகலாம்.

## கன்னி

- தொழிலில் முன்னேற்றம்; புதிய திட்டங் களில் ஈடுபாடு.
- நிதி நிலைமை மேம்படும்; செலவுகளை கட்டுப்படுத்துவது முக்கியம்.
- குடும்பத்தில் மகிழ்ச்சி; உறவுகள் வலுப் படும்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

## துலாம்

- சவால்கள் எதிர்கொள்ளலாம்; பொறுமை யுடன் செயல்படுவது அவசியம்.
- செலவுகள் அதிகரிக்கும்; திட்டமிட்ட செலவுகள் அவசியம்.
- சில மனக்கசப்புகள் ஏற்படலாம்; பேசுவதில் கவனமாக இருக்கவும்.

## விருச்சிகம்

- தொழிலில் முன்னேற்றம்; புதிய பொறுப் புகள் கிடைக்கும்.
- வருமானம் அதிகரிக்கும்; முதலீடுகள் லாபமாக இருக்கும்.
- குடும்பத்தில் மகிழ்ச்சி; உறவுகள் வலுப் படும்.

## தனுசு

- புதிய வாய்ப்புகள்; உழைப்பால் முன்னேற் றம்.
- நிதி நிலைமை மேம்படும்; சேமிப்பு அதி கரிக்கும்
- உறவுகளில் ஒற்றுமை; புதிய உறவுகள் உருவாகலாம்.

## மகரம்

- தொழிலில் முன்னேற்றம்; புதிய திட்டங் களில் ஈடுபாடு.
- நிதி நிலைமை மேம்படும்; செலவுகளை கட்டுப்படுத்துவது முக்கியம்.
- குடும்பத்தில் மகிழ்ச்சி; உறவுகள் வலுப் படும்.

## கும்பம்

- சவால்கள் எதிர்கொள்ளலாம்; பொறுமை யுடன் செயல்படுவது அவசியம்.
- செலவுகள் அதிகரிக்கும்; திட்டமிட்ட செலவுகள் அவசியம்.
- சில மனக்கசப்புகள் ஏற்படலாம்; பேசுவதில் கவனமாக இருக்கவும்.

## மீனம்

- தொழிலில் புதிய முயற்சிகள் ஆரம்பிக்க சிறந்த நாள்; குடும்ப உறவுகள் வலுவடை யும்.
- புதிய வாய்ப்புகள் மற்றும் சவால்கள்; செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.
- உழைப்பின் பலன்கள் கிட்டும்; குடும்பத் துடன் மகிழ்ச்சிகரமான நேரம்.



ஆன்மிகமலர்.காம் இணைய இதழுக்கு 2025ம் ஆண்டு ராசிபலனை துல்லியமாக கணித்து எழுதியவர் ஜோதிஷ் ப்ரவீன, ஜோதிஷ் விஷர்த, ஜோதிஷ் சாஸ்த்ரி, ஜோதிஷ் ஆச்சார்ய, ஜோதிஷ் வாசஸ்பதி டாக்டர்

ஆஸ்ட்ரோ ஆச்சார்யா
V S ஹரி ஹர சுதன், P.hd.,
+91 7339175496 sudancool2001@gmail.com

e-magazine
aanmeegamalar.com




# Aanmeega Malar

## English magazine

## coming soon...

For more details
9444228203
(9 AM to 4 PM)

## covering all spiritual information

**Those who want to send spiritual messages please send them along with their photo and phone number**

# மூலவராக அருள்பாலிக்கும் சக்கரத்தாழ்வார்

திருமாலின் வலக்கையை அலங்கரிக்கும் சக்கர ஆயுதமே சக்கரத்தாழ்வார். இவர் திருமாலுக்கு இணையானவர் என்று வேதாந்ததேசிகர் கூறுகிறார்.

இவர் திருவாழியாழ்வான், சக்கரராஜன், நேமி, திகிரி, ரதாங்கம், சுதர்சன ஆழ்வார் என்றெல்லாம் பல பெயர்களால் அழைக்கப்படுபவர்.

திருமால் கோவில்களில் சக்கரத்தாழ்வாருக்குத் தனிச் சன்னதி உண்டு.

இவர் பதினாறு, முப்பத்திரண்டு என்ற எண்ணிக்கைகளில் கைகளை உடையவர்.

பெரியாழ்வார் `சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு' என வாழ்த்திப் பாடியுள்ளார்.

திருமாலுக்கு இணையானவர் என்று எழுதிய சுவாமி தேசிகன், சுதர்சனாஷ்டகத்தில் சக்கரத்தாழ்வாரைப் பலவாறும் போற்றியுள்ளார்.

பொதுவாக எல்லா வெங்கடாஜலபதி கோவில்களிலும் மூலவர் பெருமாளாக இருப்பது தான் வழக்கம். இதற்கு காரணம் இந்த விக்கிரத்தில் சுவாமி உயிரோட்டத்துடன் இருப்பது தான் காரணம் என்கிறார்கள்.

நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் வட்டத்தில் தாமிரபரணி நதியின் தென்கரையில் கரி சூழ்ந்த மங்கலம் என்ற ஊர் உள்ளது.

முன்னொரு காலத்தில் இந்த கிராமத்தைச் சுற்றிலும் கரும்புத் தோட்டங்கள் இருந்ததாகவும் அதை சாப்பிடுவதற்காக

எப்பொழுதும் யானைக் கூட்டம் இக்கிராமத்தைச் சுற்றி வந்தபடியால் கரி சூழ்ந்த மங்கலம் என்று பெயர் பெற்றதாகவும் சொல்கிறார்கள்.

தாமிரபரணி கரையில் இருக்கும் இந்த ஊரில் சக்கரத்தாழ்வார் கோவில் அமைந்துள்ளது.

இக்கோவிலின் சிறப்பம்சம் மூலவர் தான்.




பொதுவாக எல்லா வெங்கடாஜலபதி கோவில்களிலும் மூலவர் பெருமாளாக இருப்பதுதான் வழக்கம். ஆனால் இவ்வூரில் உற்சவர் அலமேலு மங்கா சமேதமாக வெங்கடாஜலபதி உள்ளார்.

மூலவராக சக்கரத்தாழ்வார் இருக்கிறார்.

ஒரே சுதர்சன சக்கரத்தில் முன்புறம் 16 திருக்கைகளுடன் கூடிய மகா சுதர்சன மூர்த்தியாகவும் பின்புறம் நான்கு திருக்கரத்திலும் சக்கரம் ஏந்திய நிலையில் யோக நரசிம்மராகவும் மூலவர் காட்சி அளிக்கிறார்.

ஆதிகாலத்தில் இக்கோவிலில் கேரள நம்பூதிரிகளின் வழிபாட்டு முறை கடைபிடிக்கப் பட்டது.

இக்கோவிலில் மூலஸ்தானத்திற்கு அருகில் செல்லும் பக்தர்கள் மேல் சட்டையைக் கழற்றி

e-magazine
aanmeegamalar.com



விட்டுத்தான் செல்ல வேண்டும் என்பது அந்த வழிபாட்டு முறைகளில் ஒன்றாகும்.

இதுவும் கேரள பாரம்பரியத்தில் இக்கோவில் பூஜிக்கப்பட்டதற்கு சான்றாக அமைகிறது.

மூலஸ்தான விக்கிரகத்திற்கு மாதத்திற்கு பத்து நாட்கள் வரை எண்ணெய் சாத்தி அபிஷேகம் நடைபெறுகிறது.

எண்ணெய் சாத்தி அபிஷேகம் செய்த சில மணி நேரங்களில் மூலவர் விக்கிரகத்தின் மேல் எண்ணெய் பசையே இல்லாமல் போய் விடும்.

இதற்கு காரணம் இந்த விக்கிரத்தில் சுவாமி உயிரோட்டத்துடன் இருப்பது தான் காரணம் என்கிறார்கள்.

சுதர்சன மூர்த்தியை வழிபடுவதால், மனிதனுக்கு வரும் பல்வேறு பாதிப்புகளுக்கும் முதன்மைக் காரணமாக இருக்கும் கடன் (ருணம்), நோய் (ரோகம்), எதிரி (சத்ரு) எனும் மூன்றும் அழிந்து மன அமைதி கிடைக்கும். கல்வி தொடர்பான தடைகள் அனைத்தும் நீங்கித் தடையற்ற கல்வி வளம் கிடைக்கும். மேலும், கெட்ட கனவுகள், மனக்குழப்பம், மனநோய், தீய சக்திகளால் ஏற்படும் மனம் தொடர்புடைய பாதிப்புகள் மற்றும் அதனால் வரும் துன்பங்களில் இருந்து விடுபட முடியும்.

சக்கரத்தாழ்வாராகிய சுதர்சன மூர்த்தி சுக்கிரனுக்கு அதிபதியாக இருப்பதால், இக்கோயில் சுக்கிரன் பரிகாரத் தலமாகவும் இருக்கிறது.

இங்குள்ள நரசிம்மருக்குப் பிரதோஷ காலங்களில் தொடர்ச்சியாகப் பதினொன்று பிரதோஷ நாட்களில் பானகம் படைத்து வழிபட்டால் பக்தர்கள் நினைத்து வேண்டியது நிறைவேறும்.

கி.பி 1514ல் இக்கிராமத்துக்கு வந்த அப்பய்யங்கார் என்பவர் தாமிரத்தால் மூடிய கொடி மரம் நிறுவி, கருட வாகனம் அமைத்து, பதினோரு ஆழ்வார்கள் சிலைகள் பிரதிஷ்டை செய்துள்ளார்.

கல்வெட்டுகளில் தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இருமொழி எழுத்துக்களும் இந்த கோவிலில் இடம் பெற்றுள்ளது.

இந்த கோவிலின் அருகே தென்னக்கத்தின் காளகஸ்தி என்றழைக்கப்படும் துருவாச முனிவர் அமைத்த சிவன் கோவிலிலும், துருவாச முனிவரின் தீர்த்த கட்டமும் உள்ளது.

நடை காலை 7 மணி அளவில் இருந்து 10 மணி வரைக்கும் மாலை 4 மணியில் இருந்து 7 மணி வரைக்கும் திறந்து இருக்கும். இந்தக் கோவிலுக்கு நெல்லை புது பஸ்நிலையத்தில் இருந்து சேரன்மாதேவி வழியாக பாபநாசம் செல்லும் அனைத்து பஸ்களிலும் வரலாம்.

பத்தமடை என்ற இடத்தில் இறங்கி, ஆட்டோவில் கோவிலை அடையலாம். நெல்லை சந்திப்பு மற்றும் சேரன்மாதேவியில் இருந்து கரிசூழ்ந்த மங்கலத்திற்கு டவுண் பஸ் வசதி உண்டு. கோவில் ஊரில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் தாமிரபரணி ஆற்றங்கரையில்உள்ளது.

# காசியில் அவசியம் தரிசிக்க வேண்டிய சூரியன் கோவில்கள்

e-magazine
aanmeegamalar.com



விருத்த ஆதித்யா
அறைக்கு வெளியே

## விருத்த ஆதித்யா

காசி காண்டத்தின் கூற்றுப்படி, ஒருமுறை ஹரித் என்ற தீவிர பக்தர் வயதில் மிகவும் வயதானவர், விசாலாக்ஷி தேவிக்கு அருகில் நின்று, சூரிய பகவானிடம் தீவிரமாக பிரார்த்தனை செய்தார் நீண்ட காலத்திற்குப் பிறகு, சூரிய பகவான் அவர் முன் தோன்றி, முதியவரிடம் அவர் (சூரிய பகவான்) மகிழ்ச்சியடைந்ததாகவும், அந்த முதியவர் ஏதேனும் தெய்வீக வரம் தேடலாம் என்றும் கூறினார்.

முதியவர் சொன்னார், "தபஸ் செய்வதற்கு ஒரு பக்தனுக்கு போதுமான பலம் தேவை செழிப்பு, ஞானம் மற்றும் அனைத்து





விருத்த ஆதித்யா
அறைக்கு உள்ளே

aanmeega

மகிழ்ச்சிகளையும் தரும் தபஸ் போன்ற சிறந்த எதுவும் இந்த உலகில் இல்லை. இருப்பினும், தவங்களைச் செய்வதற்கு ஒருவர் இளமையாகவும், வீரியமாகவும் இருக்க வேண்டும், அதன்படி, முதியவர் தன்னை இளமையாக மாற்ற வேண்டும் என்று சூரிய பகவானிடம் வேண்டினார்.

சூரிய பகவான் அந்த முதியவரின நேர்மை மற்றும் பக்தியை கண்டு மனம் நெகிழ்ந்து அதற்கேற்ப வரம் அளித்தார். இதனால் முதியவர் இளைஞரானார். சூரிய பகவான் அந்த இடத்தில் ஒரு முதியவரால் துதிக்கப்பட்டதால், அந்த இடத்தில் இறைவன் விருத்த ஆதித்யர் என்று அழைக்கப்பட்டார்.

காசி காண்டத்தின் கூற்றுப்படி, விருத்த ஆதித்யாவிடம் தவறாமல் பிரார்த்தனை செய்பவர் ஒரு இளைஞனைப் போல எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பார்.

விருத்த ஆதித்யாவின் இடம்

விருத்த ஆதித்யா டி3/15, மீர்காட்டில் உள்ள பரே ஹனுமான்ஜிக்கு தெற்கே அமைந்துள்ளது. பக்தர்கள் தசாஸ்வமேத விஸ்வநாத் கல்லி வரை ரிக்ஷா மூலமாகவும், பின்னர் கல்லியில் நடந்தேவும் இந்த இடத்தை அணுகலாம். இந்த கோவில் ஏறக்குறைய காசி விசாலாக்ஷி கோவிலுக்கருகில் வரும். மாற்றாக, அவர்கள் மீர் காட் வரை படகு சவாரி செய்து படிக்கட்டுகளில் ஏறலாம்.

அருகிலுள்ள மற்ற தெய்வங்கள் ஆஷா விநாயக், ஸ்வேத் மாதவ், தர்மேஸ்வரர்,

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.





யம ஆதித்யா:

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

aanmeegam

விசாலாக்ஷி தேவி முதலியன, அவற்றின் விவரங்கள் வேறு இடங்களில் கொடுக்கப் பட்டுள்ளன.

## யம ஆதித்யா

ஒருமுறை யமராஜர், யம தீர்த்தத்தில் ஒரு சிவலிங்கத்தையும் பகவான் சூரியனுக்கு ஒரு சிலையையும் நிறுவி கடுமையான தவங் களைச் செய்தார் சிவலிங்கம் யமேஸ்வர் என்றும், சூரியனின் சிலை யம ஆதித்யா என்றும் அழைக்கப்பட்டது.


ஒருவர் யம தீர்த்தத்தில் (இப்போது சங்கடகாட்டில் உள்ள கங்கை) ஸ்நானம் செய்து, யமேஸ்வரரையும், யம் ஆதித்யரையும் வழிபட்டால், அத்தகைய பக்தர் நரக வேதனையை அனுபவிக்க மாட்டார்கள் என்று காசி காண்டம் கூறுகிறது.

செவ்வாய், பரணி நட்சத்திரம் மற்றும் சதுர்த்தசி (அமாவாசை அல்லது பூர்ணி மாவிற்குப் பிறகு 14 வது நாள் இணைந்த ஒரு மங்கல நாளில், ஒருவர் தனது முன்னோர்களுக்கு இவ்விடத்தில் திதி காரியங்கள் செய்தால், அவர் எல்லா சுகத்தையும் அடைவார் முன்னோர்கள் தங்கள் 137 சந்ததியினர் யம தீர்த்தத்தில் நீராடி மேற்கூறிய நாளில் சடங்குகளைச் செய்ய ஆவலுடன் காத்திருப்பார்கள் என்பது நம்பிக்கை.

யம தீர்த்தத்தில் நீராடி ஆதித்யாவையும், யம யமேஸ்வர ரையும் பிரார்த்தனை செய் பவர் எப்போதும் இருப்பார்.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178




# Aanmeega Malar

## English magazine

coming soon...

covering all spiritual information

For more details

9444228203

(9 AM to 4 PM)

Those who want to send spiritual messages please send them along with their photo and phone number

# மரத்தில் தெய்வமா? மரமே தெய்வமா?




மனிதன் உயிர்வாழ்வதற்கு சூரியன் அத்தியா வசியமான தேவை என்று சொல்வார்கள். சூரியன் எப்படி மனிதகுலம் வாழ்வதற்கு தேவையோ அதை விட ஆயிரம் மடங்கு தேவை பூமி பூமி இல்லை என்றால் சூரிய வெளிச்சம் தொடர்ந்து கிடைத்து என்ன பயன்? சூரிய வெளிச்சத்தை வாங்கி அதை மனிதனுக்கு தேவையான மூல பொருளாக உருமாற்றி கொடுக்கும் வேலை பூமியை மையமாக வைத்தல்லவா நடக்கிறது. எனவே மனிதன் வாழ்வதற்கு பூமியே மிகவும் அவசியமானது.

மனிதன் வாழ்வதற்கு பூமி தேவை அந்த பூமி வாழ்வதற்கு என்ன தேவை மனிதனா? நிச்சயம் மனிதனாக இருக்க முடியாது. பத்துமாதம் வயிற்றில் சுமந்து பால் கொடுத்து வளர்த்த அன்னையின் வாயிற்றை கிழிப்பது போல மனிதன் இன்று பூமியை சிறிது சிறிதாக கொலை செய்து கொண்டிருக்கிறான். அதனால் மனிதன் இல்லா விட்டால் பூமி இன்னும் சிறப்பாக வாழும் என்றே சொல்லலாம். பிறகு எது பூமி வாழ்வதற்கு தேவையானது என்று ஆராயும் போது விஞ்ஞானம் மரங்கள் மட்டுமே பூமியின் வளர்ச்சிக்கு காரணமாக இருக்கிறது என்று சொல்கிறது.

மரங்கள் பூமியை மட்டும் வாழ செய்ய வில்லை பூமியிலே வாழுகின்ற மனிதன் உள்ளிட்ட அனைத்து ஜீவன்களையும் வாழ வைக்கிறது. மரங்கள் இல்லாவிட்டால் கரியமலவாயு ஜீரணிக்க பட்டு பிராணவாயு கிடைக்காது. பிறகு எப்படி உயிர்கள் சுவாசம் செய்ய முடியும்? எனவே பூமியின் இதயமே மரங்கள் என்று துணிந்து



சொல்லலாம். மரங்கள் இல்லா விட்டால் மனித னில்லை மனித நாகரீகள் இல்லை இன் றைக்கு நாம் கண்முன்னால் காணுகின்ற எந்த வளர்ச்சியுமே இல்லை.

மனித வாழ்க்கையின் அடிப்படை தேவை களுக்கு மரங்கள் பலவகையில் உதவி செய்து வருகிறது. இன்று நாம் அதை மறந்து விட்டு கண்ணில் அகபடுகிற மரங்கள் அனைத்தையும் வெட்டி வீழ்த்தி கொண்டிருக்கிறோம்.

உணவு என்பது மனிதனுக்கு கண்டிப்பாக தேவை மரங்கள் அந்த உணவையும் உணவை பெறுவதற்க்கான வாய்ப்புகளையும் மனிதனுக்கு கொடுக்கிறது. உணவை போலவே உடையும் அவசியம். அந்த உடையை தருவதும் மரங்களே ஆகும். அடுத்ததாக மிக முக்கிய தேவையான தங்குமிடத்தை உருவாக்கி கொள்வதில் அந்த காலத்திலும் இந்த காலத்திலும் மரங்களே மூல பொருளாக இருக்கிறது.

ஆதிகால மனிதன் குகைகளில் வாழ்ந்தான் அடுத்து வந்த மனிதன் காடுகளை திருத்தி நிலங்களாக சமைத்து வேளாண்மையை துவங்கிய பிறகு நிலையான வீடுகளை ஏற்படுத்தி ஒரே இடத்தில் தங்க துவங்கினான். அப்படி அவன் வீடுகளை கட்டி கொள்ள கல்லும் மண்ணும் உதவி செய்வதற்கு முன்பே மரங்கள் தான் பேருதவி புரிந்தன ஆதி மனிதனின் நாகரீக ஆயுதம் மரங்களிலிருந்தே தயாரிக்க பட்டது. வில்லும் அம்பும் ஈட்டியும் ஆரம்ப காலத்தில் மரமாகவே இருந்தது கல்லுக்கு பிறகு அந்த இடத்தை மரங்கள் பிடித்து கொண்டன. வேட்டை ஆடவும் பகையை ஒடுக்கவும் ஆயுதமாக பயன்பட்ட மரம் மனிதன் வீட்டில் பயன்படுத்திய தட்டுமுட்டு சாமானாகவும் இருந்தது. இடிக்கும் உரல் தண்ணீர் தெளிக்கும் பாத்திரம் குவளைகள் அனைத்துமே மரங்களே.

வீட்டு உபயோக பொருளாக மரங்கள்இருந்த காலமுதல் அது மறைந்து உலோக பொருள்கள் பயன்பாட்டுக்கு வந்து விட்ட காலம் வரையிலும் மரங்களின் தேவை மிக அதிகமாக இருந்தன. அதன் பிறகு மரங்கள் தனிப்பட்ட உபயோகத்திற்கு என்ற நிலையிலிருந்து மாறி சமூக பயன்பாடு என்ற நிலை நோக்கி வளர்ந்தது. ஊரார் அனைவரும் ஒரே இடத்தில் கூடும் இடமாகவும் நீதி விசாரணை செய்கின்ற நீதி மன்றமாகவும் தண்டனை வழங்குகின்ற இடங்களாகவும் மரத்தடிகள் பயன்பட துவங்கின. மன்றம் பொதியில் முற்றம் என்ற வார்த்தைகள் மரத்தடிகளையே சுட்டி காட்டுகிறது என்பதை நினைவில் வைக்க வேண்டும். சங்க இலக்கியங்களில் சிறப்பு வாய்ந்த அகநானூறு புறநானூறு போன்ற நூல்களும் மணிமேகலையும் ஆலமுற்றம், வாகை முற்றம், வன்னிமன்றம், மன்றவேம்பு போன்ற

வார்த்தைகளால் சில இடங்களை சுட்டுகின்றன அந்த இடங்கள் அனைத்தும் குளிர்ந்த நிழல் தரும் மரத்தின் அடிவாரங்கள் என்பதை மறக்க கூடாது.

இப்படி மரங்கள் மனித வாழ்க்கையோடு பின்னி பிணைந்து விட்டதனால் மரங்களே பல நோய்களிலிருந்து மனிதனை பாதுகாக்கும் மருந்துகளாக இருந்ததனால் ஆதி மனிதன் மரங்களை பற்றி மிக தீவிரமாக ஆராய்ந்தான். கண்களை மூடி தவத்தில் ஆழ்ந்த போது அயன வெளியில் உலாவி வருகின்ற வேத மந்திரங்கள் எப்படி ரிஷிகளின் இதய கமலத்தில் வெளிப்பட்டதோ அதே போலவே மரங்களிலிருந்து தெய்வீக சக்திகள் வெளிபடுவதையும் சில மரங்கள் தெய்வீக சக்திகளை தனக்குள் ஈர்த்து கொள்வதையும் உணர்ந்தான். இதனால் அவன் அவைகளை கடவுளின் வடிவமாக போற்றி வழிபட துவங்கினான்.

மரங்களை வழிபடும் பழக்கம் உலக முழு வதுமே இருந்தது என்றாலும் இந்தியாவில் இந்துக்கள் மத்தியில் இருக்கின்ற மரவழிபாடு முற்றிலும் மாறுபட்டது. மற்ற மக்கள் மரங்களை தெய்வீக குறியீடுகளாக கொண்டார்கள் என்றால் இந்துக்கள் மரங்களை தெய்வமாகவே கண்டார்கள். மிக குறிப்பாக அரசமரம், ஆலமரம், வேப்பமரம், கடம்பமரம், வாகைமரம், வன்னிமரம், வில்வமரம், கொன்றைமரம் ஆகிய மரங்கள் இறைவனோடு ஒருகினைக்க பட்டு வழிபட பட்டன.

ஆலமரம் என்பது அரசனின் அரண்மனை போல பறந்து விரிந்து வளரும் தன்மையுடையது. பார்ப்பதற்கு எப்போதுமே பசுமையாகதழைத்து வளர்ந்திருப்பது சூறாவெளி காற்று சுழன் றடித்தாலும் அவ்வளவு சீக்கிரம் தரை யில் சாயாதது. இதனால் இறைவனான பரமசிவன் இம்மரத்தில் உறைந்திருப்பதாக மக்கள் நம்பினார். கலித்தொகை என்ற சங்க இலக்கியம் இதனாலையே சிவபெருமானை ஆலமர் செல்ல வன் என்று அழைக்கிறது. ஆலமர் செல்வன் என்றால் ஆலகால விஷத்தை உண்டவன் என்றும் ஆலமரத்தடியில் இருப்பவன் என்றும் இரண்டு பொருளை தரும். கலித்தொகை சொல்வது போலவே திருமுருகாற்றுபடையும் சிவபெருமானை ஆல்கெழுக்கடவுள் என்ற சிறப்பு பெயரால் அழைத்து மகிழ்கிறது.

அகநானூற்றில் ஒரு காட்சி வர்ணனை வருகிறது. ஆலமரத்தடியில் நாள்தோறும் பூஜைகள் நடக்கிறது கூட்டம் கூட்டமாக மக்கள் கலந்து கொள்கிறார்கள் இப்போது அந்த ஊரில் மக்கள் யாரும் இல்லாமல் பாழ்வூராக ஊர் மாறிவிட்டது இதனால் ஆலமரத்திற்கு விளக்கேற்ற யாரும் இல்லை என்று அந்த வர்ணனை ஒரு சித்திரத்தை நமக்கு காட்டுகிறது. இதன் அடிப்படையில் பார்த்தால் ஊரில் உள்ள கோவில்களுக்கு எப்படி நித்திய பூஜைகள் நடைபெறுமோ அப்படியே மரத்திற்கும் நடைபெற்றிருக்கிறது.

வேப்பமரத்தை வழிபடுகின்ற முறை சில ஆயிர வருடங்களாகவே பாரத திருநாட்டின் தென்பகுதியான தமிழகத்தில் நடந்து வருகிறது. இம் மரத்தில் காளிதேவி இருப்பதாகவும் காளியை வழிபட விரும்புபவர்கள் வேம்பை வழிபட்டாலே போதும் என்ற நம்பிக்கையும் தொன்று தொட்டு மக்கள் மத்தியில் நிலைத்திருக்கிறது.

வேப்பமரத்தை போலவே பாலைமரமும் காளி வழிபாட்டிற்கு உகந்தது. பாலை மரத்தின் கிளைகளை எடுத்தே காளிதேவிக்கு பந்தல் அமைப்பது மரக்கால் நடுவது போன்ற சடங்குகள் நடத்தப்படும். அதனால் இன்மரத்தை தெய்வ பாலை என்றும் வலிய பாலை என்றும் பதிற்று பற்று என்ற சங்க நூல் சிறப்பித்து பேசுகின்றது.

அரசியல் ரீதியான போர்களங்கள் இப்போதை விட பழங்காலத்தில் அதிகம் என்று சொல்லலாம். மன்னர்களின் அதீதமான மண்ணாசையும் தன்மான உணர்வும் பல போர்களுக்கு மூலமாக இருந்திருக்கிறது. இதனால் மக்கள் மத்தியில் போர்குணம் என்பதை மறைந்து போகாத வண்ணம் பேணி பாதுகாக்க பலவகையான நடவடிக்கைகளை அரசர்கள் செய்திருக்கிறார்கள். அப்படி செய்யப்பட்ட ஏற்பாடுகளில் மிகவும் முக்கியமானது வாகைமர வழிபாடாகும். வாகை என்ற வார்த்தையே வெற்றி என்ற பொரு ளை தருவதாகும். போரில் வாகை சூடிய வீரமற வர்கள் வாகை பூவை தலையில் சூடி வாகை மரத்தடியில் கொற்றவை என்ற காளியை வணங்கி இருக்கிறார்கள்.

ஆலமரம் போற்றப்பட்ட அளவிற்கு சங்ககாலத் தில் அரசமரம் போற்றப்பட வில்லை என்றே சொல்லலாம். சங்ககாலத்திற்கு பிறகே அரச மரத்தின் சிறப்புகளை தென்பகுதி மக்கள் உணர்திருக்கிறார்கள். அதுவரையில் அரசமரத்தை வழிபடுவதில் வடஇந்திய மக்களுக்கு மிக அதிகமான ஈடுபாடு இருந்திருக்கிறது. பகவத் கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் மரங்களில் நான் அரசமரம் என்று சொல்கிறார். ஆலமரம் அரசமரம் இரண்டிற்கும் அதிகவேருபாடுகள் கிடையாது. தாவர குடும்பத்தை பொறுத்தவரை

e-magazine
aanmeegamalar.com

இரண்டுமே ஒரே இனத்தை சேர்ந்தவைகள் இரண்டுக்கும் உள்ள பெரிய வித்தியாசம் ஆலமரத்திற்கு விழுதுகள் உண்டு அரசமரத்திற்கு அது கிடையாது. அரசமரம் ஆதிகாலத்தில் சில அரசுகளின் முத்திரை சின்னமாகவும் இருந்துள்ளது. சிந்து சமவெளியில் கிடைத்துள்ள பல முத்திரைகளில் அரசமர உருவம் பொறிக்கப்பட்டுள்ளதை காணலாம். எனவே அரசமரம் உயர்வானது வழிபட கூடியது என்ற எண்ணம் பன்னெடுங்காலமாகவே மக்கள் மத்தியில் இருக்கிறது. இதன் விளைவே குளக்கரை, ஆற்றாங்கரை, ஊரின்நடுபகுதி, ஆகிய இடங்களில் அரசமரத்தை நட்டு அங்கே விநாயகரை உட்கார வைத்து வழிபாடு நடக்கிறது.

சிவன், சக்தி, விநாயகர் வழிபாடு போலவே முருக வழிபாடும் மரங்களோடும் சம்மந்த படுத்தபட்டு உள்ளது. கடம்பமரம் முருகனுக்கு உகந்த மரம் கடம்ப மரத்தின் வாழுகின்ற தேவசேனாதிபதியாகிய முருகனை வழிபட்டால் கொடியமணம் படைத்த விரோதிகள் வீழ்வார்கள் என்ற எண்ணமும் கடம்பமரத்தடியில் வீரமரணம் அடைந்த வீரர்களை புதைத்து நடுகல் நட்டு அவர்களை வழிபட்டால் வெற்றி கிடைக்கும் என்ற எண்ணமும் மக்கள் மத்தியில் இருந்ததாக குறுந்தொகை என்ற பழந்தமிழ் நூல் நமக்கு தகவல் தருகிறது. கடம்பமரம் எப்படி முருகனோடு சம்மந்தபட்டதோ அதே போலவே வேங்கை மரமும் முருகனோடு சம்மந்தப்பட்டதாகும். வேங்கையாக நின்ற முருகனை வழிபட்டால் பயிறு விளையும். பயிர்களை நோய்கள் அண்டாது என்றும் மக்கள் நினைத்தார்கள். இதையே எரிமருள் வேங்கை கடவுள் காக்கும் குறுகார் கழனி. என்று நற்றிணை சொல்வதை அறிய முடிகிறது. அதுமட்டுமல்ல முருகபெருமானான வேங்கை மரம் பூக்க தொடங்கும் வளர்பிறை காலம் இல்லறம் துவங்குவதற்கு சரியான நேரம் வேங்கை மரத்தடியில் திருமணம் செய்தால் அந்த திருமணம் வாழையடி வாழையாக தழைத்திருக்கும் என்றும் மக்கள் நம்பியதாக கலித்தொகை கூறுகிறது.

தனிவொரு மரத்தை மட்டுமின்றி நிறைய மரங்கள் அடர்ந்து நிற்கும் காடுகளையும், புதர்களையும் புனிதம் நிறைந்ததாக மக்கள் கருதினார்கள். இதனாலையே மக்கள் அடர்த்தியாக வாழுகின்ற ஊர்களுக்கு மரங்களின் பெயர்களை வைத்தார்கள். உதாரணமாக பாண்டிய நாட்டின் தலைநகரமான மதுரைக்கு ஆதிகால பெயர் கடம்பவனம். நடராஜா பெருமான் ஆனந்த கூத்தாடும் தில்லை என்ற சிதம்பரத்திற்கு ஆதி பெயர் தில்லைவனம். புன்னை வனம் என்பது இன்றைய மயிலாப்பூர் இது தவிர திருக்குற்றாலம், திருவிடைமருதூர், திருபாதிரிபுலியூர், திருக்கச்சி ஏகம்பம் என்பவைகளும் மரத்தின் பெயர்களே இப்படி நிறைய ஊர்களின் பெயர்கள் மரத்தின் பெயராக வருவதை அறிகின்ற போது மரம் மதத்திற்கு ஆற்றியுள்ள பங்குபணி மிக அதிகம் என்றே சொல்லலாம்.

இந்துமதம் தவிர்த்த பௌத்த மதத்திலும், ஜைன மதத்திலும் கூட அரசமரவழிபாடானது சிறப்புற்று திகழ்கிறது. ஜைன மதத்தின் தீர்த்தங்கர்களான ரிஷபதேவர், மகாவீரர் ஆகியோர்களின் உரு வங்களை செதுக்கிய சிற்பிகள் அவர்கள் உருவத்திற்கு மேலேயோ கீழேயோ அரசமரத்தை மறந்துவிடாமல் செதுக்கியிருக்கிறார்கள். இதை பார்க்கும் சில அறிஞர்கள் கௌதம புத்தர் போதி மரம் என்ற அரசமரத்தடியில் தான் ஞானம் பெற்றார். அவரது ஞானத்தை நினைவு படுத்தும் வகையில் புத்தமதத்தினர் அரச மரத்தை போற்றி புகழ ஆரம்பித்த பிறகே மற்ற மத பிரிவுகளில் அரசமரம் முக்கிய பங்கு வகிக்க துவங்கியது என்று சொல்கிறார்கள். இது ஏற்க தக்க கூற்றாக இல்லை. காரணம் சிவபெருமானின் அவதாரங்களில் ஒன்றான தஷ்ணமூர்த்தி அவதாரம் அரமரத்தடியில் இருப்பதும் கண்ணன் தன்னை அரமரமாகவும் இருப்பேன் என்று சொன்னதும் புத்தமத காலத்திற்கு முற்பட்டதே ஆகும். வேண்டுமானால் அரசமர வழிபாடை உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் பரப்பியதற்கு புத்தமதம் ஒரு காரணமாக இருந்தது என்று துணிந்து சொல்லலாம்.

மௌரிய பேரரசின் புகழ்பெற்ற அரசரான சாம்ராட் அசோகர் புத்த மதத்தை பல நாடுகளிலும் பரவ செய்தவர். இவர் இலங்கையில் அந்த மதத்தை பரப்புவதற்கு அச்சாரமாக புத்த கயாவில் உள்ள அரசமர கிளை ஒன்றை தனது மகன் மூலமாக கொடுத்தனுப்பிய வரலாற்று குறிப்பு இருக்கிறது. இலங்கையில் உள்ள சிங்கள மக்கள் புத்த மதத்தை தழுவிய பிறகு இந்த மர வழிபாடு பல வகையிலும் அந்த நாட்டில்



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

aanmeegamalar.com
e-magazine



சிறப்புற்று வளர்ந்தது. இருந்தாலும் கூட அசோகர் அனுப்பிய அரசமர கிளை இலங்கைக்கு வருவதற்கு முன்பே அங்கு அரசமரத்தை வழிபடும் பழக்கம் இருந்ததாக தெரிகிறது. புத்தமதம் பரவுவதற்கு முன்பாக சிங்கள மக்கள் நாக வழிபாட்டையும் யக்ஷவழிபாட்டையும் செய்பவர்களாக இருந்தார்கள். அவர்கள் இவ் வழிபாடுகளை அரசமரத்தடியில் செய்வதாக பாளி இலக்கியங்களும் மஹாவம்சமும் தெரிவிக்கின்றன.

இலங்கையின் சரித்திரத்தை கூறும் மஹா வம்சத்தில் வழிபாட்டிற்குரிய மரமாக கடம்ப மரமும், கடம்ப வனமும் குறிப்பிட படுகின்றன. இந்த வனத்தில் மஜே என்ற யக்ஷகடவுளின் கோவில் இருந்ததாக தெரிகிறது. அந்த யக்ஷகோவிலே பிற்காலத்தில் துபாராம புத்தமடமாக உருவாக்கபட்டதான தகவலும் அந்த நூலில் இருக்கிறது. மஹாவம்சத்தில் சுட்டிகாட்டபடும் மஹாமேஹவனம் என்ற பகுதியிலேயே அசோகர் மகன் கொண்டுவந்த அரசமர கிளையை நட்டு வழிபாடு நடத்தியதற்காண விவரங்களும் உள்ளன.

கௌதம புத்தர் தமது வாழ்நாளில் ஒருமுறை கூட இலங்கைக்கு செல்லவில்லை என்பதை இந்திய புத்தமத இலக்கியங்கள் மறைமுகமாகவும் நேர்முகமாகவும் சொல்லும் போது கூட இலங்கையின் மஹாவம்ச நூல் புத்தர் இரண்டுமுறை இலங்கைக்கு வந்ததாக தகவல் தருகிறது. அப்படி இரண்டாவது முறை இலங்கை விஜயத்தை அவர் மேற்கொண்ட போது நாக தீபம் என்ற பகுதியில் ராஜத்தானா என்ற மரத்தை நட்டதாகவும் அந்த மரம் தன்னை வழிபடும் மனிதர்களுக்கு வேண்டிய வரங்களை கொடுப்பதாகவும் கூறுகிறது.

மரங்களை வழிபடும் இந்த தன்மைகளை கூட்டி கழித்து பார்க்கின்ற போது நமக்கு ஒரு உண்மை தெளிவாக தெரிகிறது. ஆதிகால மனிதன் மரங்களையே தெய்வமாக கருதினான் அதற்கு அடுத்ததாக வந்த மனிதன் மரத்தில் தெய்வம் வாழ்வதாக கருதினான் அதற்கு பிறகு மரத்தின் அடியில் தெய்வத்தை பிரதிஷ்டை செய்து வழிபட துவங்கினான் என்பதை அறிந்து கொள்ளலாம். கடவுள் வழிபாட்டிற்கு கோவில்கள் என்ற தனியான இடத்தை தீர்மானம் செய்த பிறகு மரவழிபாடானது ஸ்தலவிருஷமாக மாற துவங்கி விட்டது.

இன்றும் ஸ்தலவிருச்சங்கள் கடவுளை போலவே பக்தி சிரத்தையோடு வணங்க படுவதை காணலாம். மேலும் இறைவனது பிரசாதமாக ஆலய மரத்தின் இலைகளும் வழங்க படுவதும் வேண்டுதல்களை கடவுள் நிறைவேற்றிய பிறகு நன்றிகடனாக மரங்களில் காப்பு கட்டி வழிபடுவதும் இன்றுவரை தொடர்ந்தே வருகிறது. மனித அறிவு எட்டிபார்த்து கணக்கு போட முடியாத காலம் தொட்டு இன்று வரையிலும் மரங்களை இறைவனின் அம்சமாக கருதி வழிபடும் வழக்கம் இந்துக்கள் மத்தியில் குறைந்து விடவில்லை. வளர்ந்தே வருகிறது. மரங்கள் மனித வாழ்வின் அகத்திலும் புறத்திலும் ஒரு அங்கமாகவே திகழ்ந்து வருகிறது.

இங்கே நாகவழிபாட்டையும் மர வழிபாட்டை யும் தனியாக சுட்டி காட்ட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்றால் இந்து மதம் என்பது பிரபஞ்ச சக்தி அனைத்தையும் உணர்ந்தது இறைவனின் அருள்கடாச்சியம் என்பது சகல பொருள்களிலும் வெளிபடுகிறது என்பதை தெளிவாக்குகிறது என்பதற்காகவே சொல்ல வேண்டிய நிலை வந்தது. இந்துமதம் கற்றறிந்த மேதாவிகள் முற்றும் துறந்த ஞானிகள் முழு நேரமும் இறை பக்தியிலேயே காலம் கழிக்கும் பக்தர்களையும் தாண்டி மிகவும் சாதாரணமான மக்களின் வாழ்க்கையோடும் பின்னி பிணைந்துள்ளது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம். மேலும் நாகரீகமான மக்கள் மத்தியில் மட்டும் இந்து மதத்தின் தாக்கம் இருக்கவில்லை சமூதாயத்தில் வளர்ச்சி அடையாத மனிதர்கள் மத்தியிலும் இந்துமதத்தின் தாக்கம் மிக அற்புதமான முறையில் இருக்கிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

e-magazine
aanmeegamalar.com

# தைப் பொங்கலும் இதிகாச நிகழ்வுகளும்

e-magazine
aanmeegamalar.com

பொங்கல் என்பது தென்னிந்திய மக்க ளின் பழமை வாய்ந்த பண்டிகையாகும்; குறிப்பாக தமிழர் களின் பண்டிகையாகும். இந்த பண்டிகையின் வரலாற்றைப் பார்க்க வேண்டுமானால் நாம் சங்க காலமான கி.மு. 200 கி.மு. 300 நோக்கி செல்ல வேண்டும்.

பொங்கல் என்பது சமஸ்கிருத புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை போல் அறு வடை பண்டி கையாக அறியப்பட்டாலும் கூட, வரலாற்று அறிஞர்கள் இந்த பண்டிகையை சங்க காலத்தின் போது கொண்டாடப்பட்ட தை நீராடல் என நம்புகின்றனர்.

தை நீராடல்: சங்க காலத்தின் போது நடந்த கொண்டாட்டங்கள் தான் இன்றைய பொங்கல் கொண்டாட்டமாக மாறியுள்ளது. கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, தை நீராடலின் போது சங்க கால பெண்கள் 'பாவை நோன்பு' என்ற விரதத்தை கடைப் பிடித்து வந்தனர். பல்லவர்களின் ஆட்சி காலத்தில் (கி.பி. 400 – கி.பி.800) இது மிகவும் முக்கியமான பண்டிகையாக விளங்கியது. தமிழ் மாதமான மார்கழியின் போது இது கொண் டாடப்பட்டது. இந்த பண்டிகையின் போது நாட்டில் மழையும் வளமும் செழிக்க வேண்டி இளம் பெண்கள் வேண்டுவார்கள்.

இந்த மாதம் முழுவதும் பால் மற்றும் பால் பொருட்களை தவிர்ப்பார்கள். தங்கள் முடிக்கு எண்ணெயிட்டு கொள்ள மாட்டார்கள். மேலும் பேசும் போது கடுமையான சொல்லை பயன்படுத்த மாட்டார்கள்.

பெண்கள் அனைவரும் விடியற்காலையில் குளித்து விடுவார்கள். ஈர மண்ணில் செய்யப்பட்ட கட்யாயணி என்ற பெண் தெய்வத்தின் சிலையை அவர்கள் வணங்கி வந்தார்கள். தை மாதத்தின் முதல் நாள் தங்கள் நோன்பை முடித்துக் கொள்வார்கள்.

நெற்பயிர்கள் செழிப்பதற்காக அளவுக்கு அதிகமான மழையை கொண்டு வருவதற்காகவே இந்த நோன்பு. பழமை வாய்ந்த இந்த மரபுகளும், சடங்குகளும்தான் பொங் கல் கொண்டாட்டங்க ளுக்கு பிள்ளையார் சுழி போட்டது.

திருப்பாவை மற்றும் திருவெம்பாவை தை நீராடல் பண்டிகை பற்றியும்,



பாவை நோன் பின் போது கடைப்பிடிக்கப்படும் சடங்குகள் பற்றியும், ஆண்டாளின் திருப்பாவை மற்றும் மாணிக்க வாசகரின் திருவெம்பாவை ஆகியவற்றில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குலோத்துங்க சோழ அரசன் கோவில்களுக்கு நிலத்தை பரிசாக அளிப்பார். அதிலும் குறிப்பாக பொங்கல் பண்டிகையின் போது என திருவள்ளூர் வீரராகவா கோவிலில் உள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சைவ, வைணவத்தில் பொங்கல் பற்றி இரண்டு வரலாற்று கதைகள் உள்ளது. ஒன்று சிவபெருமானுடன் தொடர்புடையது, மற்றொன்று இந்திர தேவனுடன் தொடர்புடையது.

சிவபெருமான் மற்றும் நந்தி புராணத்தின் படி, ஒரு முறை நந்தியிடம் பூமிக்கு செல்லுமாறும், அங்கே மனிதர்களிடம் தினமும் எண்ணெய் தேய்த்து குளித்து, மாதம் ஒரு முறை மட்டுமே உணவு உண்ணுமாறு கூற சொன்னார் சிவ பெருமான்.

ஆனால் நந்தியோ, தவறுதலாக, தினமும் உண்ணவும் மாத மொருமுறை எண்ணெய் தேய்த்து குளிக்கவும் அனைவரிடமும் கூறி விட்டார். இதனால் கோபம் கொண்ட சிவபெருமான், மனிதர்களுடன் நிலையாக பூமியில் வாழுமாறு நந்திக்கு சாபமிட்டார். அதிகமான உணவை தயாரிக்க மனிதர்களுக்கு உதவியாக நிலத்தை உழ வேண்டும் என கூறினார்.

இதன் காரணமாகத்தான் பொங்கலுக்கு அடுத்த நாள் மனிதர்களுக்கு உதவும் நந்தி தேவருக்கு சமமான மாட்டினத்தை சிறப்பிக்கும் வகையில் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.



மற்றுமொரு புராணக் கதையின் படி, கடவுள்களுக்கு எல்லாம் அரசனானதால் மிகவும் கர்வத்துடன் இருந்து வந்த இந்திர தேவனுக்கு பாடம் புகுத்த எண்ணினார் குழந்தை பருவத்தில் இருந்த கிருஷ்ணர். ஆடு மேய்ப்பவர்கள் அனைவரும் இனி இந்திர தேவனை வணங்க வேண்டாம் என கூறினார். இதனால் கோபம் கொண்ட இந்திர தேவன், புயல் மழையை உண்டாக்க மேகங்களை பூமிக்கு அனுப்பினார்.

மழையும் 3 நாட்களுக்கு தொடர்ந்தது. கிருஷ்ணரோ மனிதன் இனத்தை பாதுகாக்க கோவர்த்தன மலையை கையில் தூக்கி சுமந்து கொண்டார். பின் தன் தவறையும், கிருஷ்ணரின் தெய்வீக சக்தியையும் உணர்ந்தார் இந்திர பகவான். கிருஷ்ணரிடம் மன்னிப்பு கேட்டு மக்களின் வாழ்விற்கு தேவையான நெற்பயிர் போன்றவற்றை மீண்டும் புத்துயிர் பெற்று செழிப்படைய உதவினார் இந்திரன். இதனால் இந்த தினத்தில் அறுவடை காலமாக மாறியது. இதனால் விவசாயம் செய்பவர்கள் இந்த நாளை பொங்கல் பண்டிகையாக கொண்டாட ஆரம்பித்தனர்.

பொங்கல் தினத்தன்று நெற்கதிர்களை அறுப்பதற்கு முன்பு கடவுளுக்கு விசேஷ பூஜை நடத்தப்படும். தங்களின் ஏர் கலப்பை மற்றும் நெல் அறுக்கும் அரிவாள்கள், சந்தன குப்பி ஆகியவற்றை வைத்து சூரியனையும், பூமியையும் விவசாயிகள் வணங்கிடுவார்கள். கடவுள் முன் வணங்கப்பட்ட கருவிகளை கொண்டு தான் நெற்கதிர்களை அறுவடை செய்வார்கள். நான்கு நாள் பண்டிகை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பண்டிகை கொண்டாடப்படுகிறது. முதல் நாளான போகிப்பொங்கல், குடும்பத்திற்கானது. இரண்டாம் நாளான சூரியப் பொங்கல் சூரிய பகவானை வழிபடுவதற்கான நாளாகும்.

மூன்றாம் நாளான மாட்டுப் பொங்கல், மாடுகளை வழிபடுவதற்கான நாளாகும். இந்த நாளில் மாடுகளை குளிப்பாட்டி, கொம்புகளுக்கு அடர்த்தியான வர்ணம் பூசி அதன் கழுத்தை சுற்றி மாலையிடப்படும். கடவுளுக்கு படைத்த பின், அந்த பொங்கல் கால்நடை விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் உண்ணுவதற்கு வழங்கப்படும். நான்காம் நாளான பொங்கல் காணும் பொங்கல், குடும்ப உறுப்பினர்களும், குடும்பத்துக்கு உறு துணையாக விளங்கும் விலங்குகளையும் அரவணைத்து செல்வதற்குமான நாளாகும்.

– என்.ஸ்ரீபதி, சென்னை.

# பிறருக்கான வேண்டுதல்

## நிச்சயம் நிறைவேறும்



ஒரு கப்பல் காற்றில் சிக்கி நடுக்கடலில் உடைந்தது. அதிலிருந்தவர்களில் இருவர் மட்டும் நீந்தி பாலைவனத்திற்குச்சமமான ஒரு தீவை அடைந்தனர். சிறிதளவு தண்ணீர் மட்டும் உள்ள அந்தத் தீவிலிருந்து தம்மைக் காப்பாற்றுவதற்கு இறைவனால் மட்டும்தான் முடியும் என்பதை உணர்ந்த இருவரும் கடவுளை வேண்டிக்கொள்ள தீர்மானித்தனர்.

ஆனால் யாருடைய வேண்டுதலை இறைவன் கேட்பான்! என்பதை அறிவதற்காக தீவை தெற்குப்பக்கமென்றும் வடக்குப்பக்கமென்றும் இரண்டா கப் பிரித்தனர். ஒருவர் தெற்குப்பக்கத்திலிருந்தும் மற்றொருவர் வடக்குப் பக்கத்திலிருந்தும் இறைவனை வேண்டத் துவங்கி னர். முதலில் அவர்கள் உணவிற்காக வேண்டிக் கொண்டனர்.

மறுநாள் காலையில் தெற்குப்பக்கத்தில் நல்ல பழங்கள் உள்ள ஒரு மரம் காணப்பட்டது. அதன் மறுநாள் அவர்கள் ஆடைகளுக்காகப் இறைவனிடம் வேண்டினர். தெற்குப் பக்கத்திலிருந்த நபருக்கு மட்டும் ஆடை கிடைத்தது. அதன் மறுநாள் அங்கிருந்து தப்பித்துச் செல்வதற்கு தோணிக்காக இருவரும் இறைவனை வேண்டினர்.

தெற்குப்பக்கத்தில் தோணி வந்தது. தெற்குப் பக்கத்திலிருந்தவர் தோணியில் ஏறி தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத் தீர்மானித்தார்.

அவருக்கு வடக்குப் பக்கத்திலுள்ள நபரை தோணியில் ஏற்றுவதற்கு விருப்பமில்லை.

காரணம், “அந்த நபர் கடவுளால் அங்கீகரிக்கப்படவில்லை, அந்த நபரின் எந்தப் வேண்டுதலையும் இறைவன் கேட்கவில்லை. அந்த நபரை தோணியில் ஏற்றினால் தெய்வகுற்றம் உண்டாகும்’’ என்று தெற்குப்பக்கத்திலிருந்த நபர் நினைத்தான்.

தோணி கரையிலிருந்து நகரத் தொடங்கியபோது ஆகாயத்திலிருந்து “நீ ஏன் வடக்குப்பக்கத்திலிருந்தவனை தோணியில் ஏற்றவில்லை?’’ என்று ஒரு குரல் கேட்டது.

“கடவுளால் புறங்கணிக்கப்பட்ட அவன் இந்தத் தோணியில் ஏறினால் இறைவன் விரும்ப மாட்டான். அதனால் இந்தத் தோணி ஒருவேளை தண்ணீரில் மூழ்கிப்போக வாய்ப்பு உள்ளது. அவனுடைய ஒரு வேண்டுதலைகூட இறைவன் கேட்கவில்லையே’’ என்று தெற்குப் பக்கத்திலிருந்தவன் பதிலளித்தான்.

அதற்கு, “நீ தவறு செய்துவிட்டாய். ‘உன்னுடைய பிரார்த்தனையை கேட்கவேண்டும்’என்பது மட்டும்தான் வடக்குப்பக்கத்திலிருந்த வனுடைய பிரார்த்தனையாக இருந்தது. அவனு டைய பிரார்த்தனையை மட்டும்தான் நான் கேட்டேன்’’ என்று ஆகாயத்திலிருந்து வந்த குரல் பதிலளித்தது.

இதிலிருந்து என்ன தெரிய வருகிறது என்றால் மேலே தரப்பட்டுள்ள செய்தியில் கூறியுள்ளவாறு பிறருடைய வேண்டுதல்கள்தான் பல நேரங்களிலும் நமக்கு பல நன்மைகளும் ஏற்படுகின்றன. குறிப்பாக பெற் றோரின் வேண்டுதல்கள், நண்பர்களின் வேண்டுதல்கள்.

இதுபோன்ற வேண்டுதல்கள்களுக்கு விடை கிடைப்பதற்கு சாத்தியக் கூறுகள் அதிகமாகும். வாழ்க்கையில் நம்மால் முடிந்த உதவியை பிறருக்குச் செய்யவேண்டும். சிலநேரம் சிலருடைய ஆசீர்வாதமும் பிரார்த்தனையும் ஆபத்துக்களிலிருந்தும் விபத்துக்களிலிருந்தும் காப்பாற்றும்.



e-magazine
aanmeegamalar.com

# பாண்டவர்கள் வணங்கிய அய்யவாடி மஹா பிரத்யங்கரா தேவி!!!



தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் வட்டத்தில் ஐவர்பாடி என்று பெயர் பெற்ற ஒரு கிராமம், தற்போது அய்யாவாடி என்றழைக்கப்படுகிறது. சக்தியின் உக்கிரமான வடிவமான மஹா பிரத்யங்கரா தேவி இங்குதான் வாசம் செய்து வருகிறாள்

நான்கு சிங்கங்கள் பூட்டிய ரதத்தில் சிம்ம முகத்தோடு எட்டு கைகளோடு, மிகக் கோபமான பார்வையோடும், உக்கிரமான வேகத்தோடும் காட்சி தருகிறாள்.

நரசிம்மர், பிரஹலாதனுக்காக இரண்யனை வதைக்க சிங்க உருவமெடுத்தபோது, அதிலிருந்து விடுபட முடியாமல் தன் வேகத்தைக் குறைக்க முடியாமல் நல்லவர்களையும் துன்புறுத்த துவங்கியபோது, அவரால் பாதிக்கப்பட்டவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டார்கள்.


சிவபெருமான் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, நரசிம்மமூர்த்தியின் உக்கிரத்தை தடுப்பதற்காக பறவையும், பூதமும், மிருகமும் கலந்த ஒரு புதிய வடிவை எடுத்ததாக புராணங்கள் சொல்கின்றன. அந்த வடிவுக்கு சரபேஸ்வரர் என்று பெயர். அந்த சரப வடிவத்தின் இறக்கைப் பக்கம் இருப்பவள் இந்த பிரத்யங்கரா தேவி.

இந்த மஹா பிரத்யங்கரா சிவனின் ஒரு பக்க சக்தியாவாள். அந்த சக்தியை தனியே வைத்து, அதற்கு தனியாக கோயில் கட்டி அய்யாவாடி என்கிற ஊரில், மக்கள் பூஜை செய்து வணங்கி வருகிறார்கள்.

சீதையைக் கடத்திச் சென்ற இராவணனுடன் போரிட ராமன் இலங்கை சென்றார். தன் சகோதரர்களையும் மகன்களையும் வரிசையாக ராமனுடன் போரிட அனுப்பிய இராவணன் எல்லாரையும் இழந்தான். மிகுந்த பலசாலியான இராவணனின் மூத்தமகன் இந்திரஜித்மட்டும் எஞ்சியிருந்தான்.

காளி பக்தனான அவன் ராமனைப் போரில் தோற்கடிப்பதற்காக அவளை வேண்டினான். மன்னர்கள் அக்காலத்தில் போரில் வெற்றி பெறுவதற்காக, எட்டுத் திசைகளில் மயான பூமியைத் தோற்று வித்து அதர்வண காளியான பிரத்யங்கரா தேவிக்கு நிகும்பலாயாகம் நடத்துவார்கள்.

அந்த யாகத்தை இந்திரஜித்தும் பிரம்மாண்டமாக நடத்தினான். நிகும்பலா யாகம் மட்டும் முடிந்து விட்டால் இந்திரஜித் மாபெரும் சக்தியை அடைந்து விடுவான். அதன்பின் அவனை போரில் வெல்ல யாராலும் முடியாது. இந்த விஷயம் ராமனுக்குத் தெரிந்து விட்டது. ராமனும்




பிரத்யங்கராதேவிக்குச் சிறப்புப் பூஜைகள் செய் தார்.

அநியாயம் வெற்றி பெறுவதற்காக இந்திரஜித் யாகம் நடத்துவதையும், பரமாத்மாவான ராமன் நியாயத்திற்காக யாகம் நடத்துவதையும் அறிந்து கொண்டாள் பிரத்யங்கரா. ராமனின் யாகத் திற்கும், அவரது நியாயமான

கோரிக்கைக்கும் செவிசாய்த்த தேவி அவ ருக்கு அனுக்கிரஹம் புரிந்தாள். தன் நீண்ட நாள் பக்தனாயினும் அநியாயத்துக்குத் துணை நின்ற இந்திரஜித்தின் பூஜையை ஏற்கமறுத்து விட் டாள். எனவே இந்திரஜித் போரில் தோற்றான். இருந் தாலும் தன் பக்தன் என்ற முறையில், அவனது வீரம் ராமாயணத்தில் புகழப்படும் வகையில் ஆசி தந்தாள்.

இத்தலம் குறித்த வரலாறு:

பஞ்சபாண்டவர்கள் தேசத்தை இழந்து, அவ மானத்தை சந்தித்து, துக்கமும் வேதனையும் பொங்க, சகோதரர்கள் ஐவரும் சுடுகாடுகளுக்கு நடுவே இருக்கும் ஒரு பகுதியைத் தேடி அலைந் தனர்.

விலங்குகள் ஏதும் தாக்கி இறந்துவிடுவோமோ தேசத்தை மீட்க முடியாமல் போய்விடுமோ என்று பயத்தில் திரிந்தனர். எதிரிகளால் தொல்லை நேருமோ என்று பதுங்கி வாழ்ந்தனர். நல்ல உண வும் உறங்குவதற்கு சரியான இடமும் இல்லாததால் நோய் வந்துவிடுமோ என்று கவலைப் பட்டனர்.

செல்வச் செழிப்புடன் தான தருமங்களைச் செய்தபடி இருந்த நிலை மாறி, தரித்திரம் பிடித்து வாட்டுகிறதே என்று கிடைக்கும் உணவை சாப்பிட்டு பொழுதைக் கழித்தனர்.

பிரத்தியங்கராதேவியை வழிபடுங்கள்; உங்களின் அத்தனை பயத்தையும் போக்குவாள்; பலம் கூட்டுவாள்; வெற்றியைத் தருவாள். அவளை பூஜித்து அவளின் அருளைப் பெறுங்கள் என்று அந்த சகோதரர்கள் ஐவருக்கும் ஏற்கனவே சொல்லப்பட்டிருந்தது.

ஒரு நாள், இவர்கள் தேடி வந்த இடமும் கிடைத்தது. அங்கே சுயம்பு மூர்த்தியாகக் காட்சி தந்தாள் பிரத்தியங்கராதேவி. இதைக் கண்டு பூரித்தவர்கள். தேவியை அர்ச்சித்து வழிபட பூக்களைத் தேடினர். அது சித்திரை மாதம் என்பதால், எங்கே தேடியும் பூக்கள் கிடைக்கவில்லை. நொந்து போனார்கள்.

“இதென்ன சோதனை? தேவியை வணங்க, பூக்கள் கூட கிடைக்கவில்லையே” என்று வருந் தினர். அந்த நேரம், எதிரே ஓங்கி உயர்ந்து நிற் கும் ஆலமரத்தைக் கண்டனர். இந்த மரத்தின்

e-magazine
aanmeegamalar.com



இலையையே பூக்களாக பாவித்து, பிரத்யங்கிரா தேவியை தியானித்து ஆலம் இலைகளையே எடுத்து அர்ச்சித்தனர். அந்த இலை, ஐந்து ஐந்து இலைகளாக தேவியின் திருப்பாதங்களில் விழுந்தன. இப்படி நெடுநாட்களாக பூஜை செய்த பலனாக, பகைவர்களை வென்றனர்; தேசத்தை மீட்டனர்; இழந்த அதிகாரத்தைப் பெற்றனர். தேசமே பூரித்துப் போனது.

இந்த ஐந்து பேரும் பஞ்ச பாண்டவர்கள். ஐவர் வந்து பூஜித்ததால், இந்தத் தலத்துக்கு ஐவர்பாடி என்ற பெயர் ஏற்பட்டது. இங்கே சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளி, தன்னை வணங்குவோரது அனைத்து பயங்களையும் போக்கி அருள் புரிந்து வருகிறாள் பிரத்யங்கிராதேவி.

கும்பகோணம் திருநாகேஸ்வரத்துக்கு அருகில் உள்ள அய்யவாடியில் 108 ஏக்கர் பரப்பளவில் குடிகொண்டிருக்கும் தேவியின் ஆலயத்தைச் சுற்றி எட்டுத் திக்குகளிலும் மயானங்கள் இருக்கின்றன.

தேவாரப்பாடல் பெற்ற சிவத்தலங்களில் இதுவும் ஒன்று. திருஞானசம்பந்தர் இத்தல சிவனைக் குறித்துப் பாடியுள்ளார்.

மூலவராக அகத்தீஸ்வரர் கிழக்கு நோக்கி உள்ளார். அம்மன் தர்மசம்வர்த்தினி தெற்கு நோக்கி அருள்பாலிக்கிறாள். தலவிருட்சம் ஆலமரம். இதில் ஆல், அரசு, புரசு, இச்சி, மா இலைகள் இருப்பது விசேஷம். கோவில் விமானம் வட மாநில பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. மஹா பிரத்யங்கரா தேவி தனிச் சந்நிதி கொண்டு வடக்கு பார்த்து அருள்பாலிக்கிறாள்.

பிரத்யங்கரா தேவி சரபேஸ்வரரின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவள். சிம்மமுகம், 18 கரங்கள் கொண்டு சிரித்த முகத்துடன் அருள் பாலிக்கிறாள். கரியநிறத்துடன், தலை யில் சந்திரகலை அணிந்து, சூலம், பாசம், டமருகத் துடன், இருபுறமும் லட்சுமி, சரஸ்வதி தேவியுடன் அற்புதமாக வீற்றிருக்கிறாள்.

இங்கு அமாவாசை தோறும் காலை 8.00 மணியிலிருந்து மதியம் 2.00 மணி வரை 'நிகும் பலா யாகம்' நடக்கிறது. மிளகாய்வற்றலை யாக குண்டத்தில்கொட்டுவார்கள். சாதாரணமாக ஒரு மிளகாய் வற்றலைத் தீயில் போட்டாலே நெடி இருக்கும். ஆனால் நிகும்பலா யாகத்தில் மூட்டை மூட்டையாகப் போடப்படும்மிளகாய் வற்றலிலிருந்து சிறிது நெடிகூட இருக்காது. கலியுகத்தில் இதுமாபெரும் அதிசயம். மேலும் 108 வகை ஹோமப் பொருட்கள் குண்டத்தில் இடப்படும். பட்டுப்புடவை, பழவகைகளும் இதில் அடக்கம். யாகம் முடிந்ததும் புனித கலசநீரால் சரபேஸ்வரருக்கும் பிரத்யங்கரா தேவிக்கும் அபிஷேகம் நடத்தப்படுகிறது. இந்த யாகத்தில் கலந்து கொண்டால் இழந்த பதவி மீண்டும் கிடைக்கும், எதிரிகளின் தொல்லை விலகும், கடன் தொல்லை தீரும், உத்தியோக உயர்வுகிடைக்கும், புதிய வேலை வாய்ப்பு உருவாகும், திருமண பாக்கியம் விரைவில் கிடைக்கும், வியாபாரம் செழிக்கும் என்பது நம்பிக்கை.

சனி பகவானின் மகன் குளிகன் இங்கு வழி பாடு செய்துள்ளதால், ஜாதக ரீதியாக சனிதோஷம் உள்ளவர்களும் யாகத்தில் பங்கேற்கின்றனர். ஒவ்வொரு மாதமும் அமாவாசை தினத்தில் நடக்கும் யாகத்தில் பல ஆயிரம் பக்தர்கள் கலந்துகொள்கிறார்கள்.


– சௌமியா சுப்ரமணியன்
18, பத்மநாபன் தெரு, பழைய பல்லாவரம்
சென்னை 600117
தொலைபேசி எண்: 9940460969





# ஸ்ரீ ஐஸ்வர்ய மகாகணபதி கோவில், கேசவ்புரம்

புது தில்லி வட மேற்கு பகுதியில் உள்ள கேசவ்புரத்தில் ஸ்ரீ ஐஸ்வர்ய மகாகணபதி கோயில் அமைந்துள்ளது. இது ஒரு சிறிய ஆனால் அழகான கோவில் மற்றும் விநாயகப் பெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்து புராணங்களின்படி, விநாயகப் பெருமான் எந்தச் சந்தர்ப்பத்திலும் முதலில் வழிபடும் கடவுளாக வரம் பெற்றவர். ஒவ்வொரு கோயிலிலும், ஒவ்வொரு திருவிழாவிலும் விநாயகப் பெருமானே முதலில் வழிபடப்படுவதற்கு இதுவே காரணம். ஸ்ரீ ஐஸ்வர்ய மகாகணபதி கோயில் புது தில்லியில் உள்ள முக்கியமான விநாயகர் கோயில்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

### கட்டிடக்கலை

இந்து புராணங்களின்படி, ஒவ்வொரு நகரத்திலும் ஒரு கணபதி கோயில் கட்டப்பட வேண்டும். கோவில் கட்டப்பட்ட காலத்தின் சரியான சான்றுகள் இல்லை. இருப்பினும்,

இந்த கோயில் நகரத்தில் உள்ள விநாயகப் பெருமானின் தீவிர பக்தர்களால் கட்டப்பட்டது என்று கூறப்படுகிறது. சிவன் மற்றும் விநாயகப் பெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பழங்கால இந்துக் கோயில்களின் கட்டிடக்கலையைப் போன்று இந்தக் கோயிலின் அமைப்பு கட்டப்பட்டுள்ளது.

கோயிலில் ஒரு பெரிய மண்டபம் உள்ளது, அங்கு பக்தர்கள் பிரார்த்தனை மற்றும் தியானத்தில் ஈடுபடுவதைக் காணலாம். கோவிலின் பிரதான சன்னதியில் விநாயகர் சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபம் ஆன்மிகக் கூட்டங்கள் மற்றும் பாரம்பரிய நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இதைத் தவிர நவக்கிரகம், அனுமன், துர்கை, ஐயப்பன், சிவலிங்கம் ஆகியோருக்கு தனி சன்னதிகள் உள்ளன.


கோவில் நன்கு பராமரிக்கப்பட்டு மிகவும் சுத்தமாக உள்ளது. கோவிலில் நிலவும் சூழல் பக்தர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் அமைதியை தருகிறது. கோவிலில் உள்ள அர்ச்சகர்கள் மிகவும் உதவியாக இருக்கிறார்கள் மற்றும் பக்தர்களின் வேண்டுகோளின் பேரில் சிறப்பு பூஜைகளை ஏற்பாடு செய்கிறார்கள். பூக்கள், இனிப்புகள் மற்றும் பழங்கள் ஆகியவை கோவிலில் கொடுக்கக்கூடிய முக்கிய பிரசாதம். கோயில் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று கோயிலில் அன்னதானம் ஏற்பாடு செய்து மக்களுக்கு விநியோகம் செய்யலாம்.

## ஆண்டு விழாக்கள்

விநாயகர் சதுர்த்தி விழாவை கோவிலில் முழு மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கொண்டாடுகிறது. ஒவ்வொரு இந்து பண்டிகையின் போதும் மக்கள் கோவிலுக்கு வருகிறார்கள். ஒவ்வொரு திருவிழாவின் போதும் கோயிலின் அர்ச்சகர்கள் சிறப்பு பிரார்த்தனைகள் நடத்துகிறார்கள்,

வெளியூரிலிருந்தும் பக்தர்கள் திரளாக வந்து கலந்து கொள்கிறார்கள். ஆண்டு தோறும் ஸ்ரீ தர்மசாஸ்தா திருக்கல்யாணம், சப்தாகம், மண்டலம்/மகரம் பூஜை இசை நிகழ்ச்சிகள், மஹன்யாஸ ஏகாதச ருத்ர ஜபம் பாராயணம், அகண்ட பாராயணம் (நிறுத்தாமல்) இசை நிகழ்ச்சி மற்றும் இசைப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகிறது.

நவராத்திரியின் போது தினமும் காலை நவ வர்ண பூஜை, சண்டி ஹோமம், மாலை சிறப்பு பாரம் பரிய இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படுகின்றன. ஏராளமான இசைக் கலைஞர்கள் இதில் பங்கேற்கினர். சிறப்பு பிரார்த்தனைகள் செய்வது இங்கு நவராத்திரி கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாகும்.



இந்த கோயிலுக்குச் செல்வது பக்தர்களுக்கு புதிய பலத்தை அளிக்கிறது, இதனால் அவர்கள் கஷ்டங்களை எதிர்கொண்டு வெற்றியை நோக்கி செயல்பட முடியும். கணபதி பகவான் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு எப்பொழுதும் உதவி செய்து அவர்களின் கவலைகளையும் துக்கங்களையும் நீக்கி அருள் செய்கிறார்.

கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவநின் இணையடி சரணம் சரணம்
சரவண பவகுக சரணம் சரணம்

## எப்படி செல்வது

கேசவ் புரம் மெட்ரோ நிலையத்தில் இருந்து 700 மீ தொலைவில் உள்ளது

விசேஷ நாள்: விநாயகர் சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, நவராத்திரி, சாஸ்தா மண்டல பூஜை

கோவில் நேரம்

காலை 6.00 – 11.00 மணி

மாலை 6.00 – 8.30 மணி

தொடர்புக்கு: 01127152951, 8368707333



டெல்லி தியாகராஜன்

–டெல்லி தியாகராஜன்
9868423215

e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

185 க்கும் மேற்பட்ட இதழ்களை

aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.




# சகல சம்பத்துகளும் அருளும் சம்பத்கிரி ஸ்ரீ லட்சுமி நரசிம்மர்





இறைவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்பதை உலக உயிர்களுக்கு மெய் பித்துக் காட்டியது திருமாலின் திரு அவதாரமான ஸ்ரீ நரசிம்மமூர்த்திகள். நாளை என்றில்லை நரசிம்மரிடத்தில்.... அப்படியான நரசிம்மர் பல திருத்தங்களில் பல வடிவங்களில் கோவில் கொண்டெழுந்து, பல அற்புதங்களை செய்து, திருவருள் புரிந்து வருகின்றார். அவ்வாறாக ஸ்ரீ நரசிம்மர் லட்சுமி நரசிம்மராக, சுயம்புவாக மலை மீது எழுந்தருளும் ஓர் உன்னதத் திருத்தலம்தான் போளூர் சம்பத்கிரி.

தொண்டை மண்டலத்தின் பல்குன்ற கோட்டத் தின் ஒரு பகுதியாக விளங்கிய போளூர் ஆதியில் புலஸ்திய மகரிஷி தவமியற்றியதால் "புலஸ்தியபுரம்" என்று அழைக்கப்பட்டுள்ளது.

இந்நகரின் மேற்கே அமைந்துள்ள மலையே சம்பத்கிரியாகும். இம்மலையில், நரசிம்மர் குபேரனுக்கு சம்பத்துகளை கொடுத்தருளியதால் சம்பத்துகளை வாரி வழங்கும் சம்பத்கிரி என்று பெயர் உருவானது.





சம்பத் என்றால் பொருள் என்கிற அர்த்தத்தில் சம்பத்கிரிக்கு கீழே அமைந்த ஊர், "பொருளூர்" என்று அழைக்கப்பட்டு, அது மருவி தற்போது போளூர் என்று அழைக்கப்படுகின்றது. சந்திரன் வழிபட்ட இத்தல ஈசனான ஸ்ரீ சோமநாதரைத் திருப்புகழில் குறிப்பிட்டுள்ளார் அருணகிரிநாதர். முருகப்பெருமானால் உண்டான பாஹுநதி என்னும் சேயாற்றின் வடகரையில் போளூர் அமைந்துள்ளது. மகிமைமிக்க சித்தர்கள் பலர் வாழ்ந்த புனித பூமி போளூர் என்பது குறிப் பிடத்தக்கது.

திருக்கோவிலூர் தபோவனம் ஞானானந்தகிரி சுவாமிகள், ஹரிதாஸ் சுவாமி, இசைமேதை அச்சுததாசர், மகான் விக்டோபா சுவாமிகள், வெட்டவெளி சுவாமிகள் என பலர் இந்த சம்பத் கிரி நரசிம்மரை வழிபட்டு பாடல்கள் புனைந்து பாடியுள்ளனர். ஸ்ரீ சங்கர்ஷணவுடையார் பாஹு நதிக்கரையில் அமைந்துள்ள ஊரான கரைப்பூண்டி யில் சம்பத்கிரியின் நிழலில் ஜீவசமாதியானார். சம்பத்கிரியை ஒட்டி மேற்குப்புறமாக சப்தரிஷி மண்டல மலையுள்ளது. இம்மலையில், சப்த ரிஷிகள் தவம் புரிந்ததாக ஐதீகம் உள்ளது.

இம்மலையில் புலஸ்தியர் மற்றும் பௌலஸ்தியர் ஆகிய இரு மகரிஷிகள் திருமாலை நோக்கி தவம்புரிந்து வந்தனர். தவத்தின் பயனாக கோவிந்தனிடமிருந்து ஒரு மாம்பழம் பிரசாதமாக கிடைத்தது.

அதை பங்கிடும் போட்டியில் பௌலஸ்தியரின் இரண்டு கரங்களும் சிதைந்தன. பௌலஸ்தியர் இம்மலைக்கு மூன்று மைல் தொலைவில் உள்ள சேயாற்றில் (செய்யாறு) தினமும் நீராடி, ஒரு மண்டலம் (48 நாட்கள்) நரசிம்மரை நினைத்து, இம்மலையினை கிரிவலம் வந்தார். 48ம் நாள் சேயாற்றில் மூழ்கி எழுந்தபோது அவரது சிதைந்த கைகள் கூடி, அவர் கரங்களில் ஸ்ரீ நரசிம்மர் விக்ரஹமும் கிடைத்தது. அந்த விக்ரஹத்தை ஊருக்குள் பிரதிஷ்டை செய்யும்படி அசரீரி சொல்லிட... அதன்படியே ஊருக்குள் பிரதிஷ்டை செய்தார்.

சுமார் 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்த இம்மலையின் உச்சியில் கல் உடைக்கும்போது உளிபட்ட இடத்திலிருந்து ரத்தம் பீரிட்டது. அதை கண்டு அஞ்சிய மக்கள் அனைவரும் அலறி யடித்துக் கொண்டு ஓடினர். அன்றே ஊரில் இருந்த ஒரு மகானுபாவர் கனவில் தோன்றிய பெருமாள், தான் இங்கு லக்ஷ்மி நரசிம்மராக, சுயம்பு வடிவில் எழுந்தருளி உள்ளதாகக் கூறி மறைந்தார். பின்னர் ஆலயம் எழுப்பப்பட்டு, வழிபாடுகள் இன்றுவரை சிறப்புடன் நடந்து வருகின்றது.

முதலில் மலை மீது சுயம்புவாக எழுந்தருளும் ஸ்ரீ நரசிம்மமூர்த்திக்கு ஹொய்சாளர்கள் ஆலயம்

e-magazine
aanmeegamalar.com




ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

aanmeegamalar.com

எழுப்பினர். பின்னர் விஜயநகர அரசர்களால் திருப்பணிகளும் செய்யப்பட்டுள்ளன. பின்னாளில் விஜயநகர வம்சத்தில் வந்த ஓகூர் சீனிவாசராவ் என்பவர் உற்சவர் நரசிம்மரோடு ஸ்ரீதேவி பூதேவி தாயார்களின் விக்ரஹத்தையும் ஸ்தாபித்தார். அதோடு, பாமா ருக்மணி உடனான ஸ்ரீ வேணுகோபால சுவாமியையும் கற்சிலையாக நிறுவி, சம்ப்ரோக்ஷணம் நடத்தினார். மலைக் கோவிலுக்கும் திருப்பணிகள் செய்தார்.

ஒரு சமயம் திப்புசுல்தான் போருக்காக இங்கு தங்கியிருந்தபோது சம்பத்கிரி மலையில் மணி ஓசை கேட்டு போர் புரியாமல் மனம் மாறி, இங்கிருந்து சென்றதாக கல்வெட்டுச் செய்தி கூறுகின்றது.

நகரின் மேற்கே நெடிதுயர்ந்த இந்த சம்பத்கிரி சுமார் 850 படிகளைக் கொண்டது. மலையடிவாரத்தில் சிறிய திருவடிகளான ஸ்ரீ ஆஞ்சநேயர் சன்னதி அமைந்துள்ளது. நான்கு ஓய்வு மண்டபங்கள் உள்ளன. இரண்டு குளிர்ந்த நீர் ஜுனைகள் காணப்படுகின்றன. மேலே ஏற, ஏற செங்குத்தான படிகள் அமைந்துள்ளன. அங்கிருந்து கீழே பார்க்கத் தலைசுற்றும். கீழே பார்க்காமல் ஏற வேண்டும். மலை உச்சியில் அரணமைப்பு போல் சுற்றிலும் மதில்கள் அமைந்துள்ளன. நடுவே தென்முகம் பார்த்த பெருமாள் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.


மோ.கணேஷ்

பலிபீடம், தீபஸ்தம்பம் மற்றும் கருடாழ்வார் சன்னதி அமைந்துள்ளன. மின்னொளியில் சங்கு சக்கரத்துடனான திருநாமம் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது.

கருவறையுள் சுயம்பு வடிவில் தென்முகமாக அருணாச்சலம் என்னும் திருவண்ணாமலையை பார்த்தபடி ஸ்ரீ நரசிம்மர் திருக்காட்சியளிக்கின்றார். முன்னே ஸ்ரீ லட்சுமி தேவியுடன் நரசிம்மமூர்த்தி சிலரூபமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளார். வலதுபுறம் கனகவல்லித் தாயாருக்கும் தனியே சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. மலைமீது பிரம்ம தீர்த்தமும், கீழே புலஸ்திய தீர்த்தமும் அமைந்துள்ளன. பாஹுநதி என்னும் செய்யாறும் இத்தலத்தின் தீர்த்தமாகும்.

இந்த மலைத்தல தரிசனத்தில் ரம்யமான இறை அனுபவத்தோடு



இயற்கையின் இன்பமும் இரட்டிப்பாக கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

சுவாதி, மாத பிறப்பு, ஏகாதசி, திருவோணம், புனர்பூசம், ரோகிணி, பஞ்சமி திதி, சப்தமி திதி ஆகிய நாட்களில் அதிகாலை 4.30 மணிக்கு மலைக்கோவிலில் திருமஞ்சனம் நடைபெறுகின்றன. சித்திரை வருடப்பிறப்பில் படிவிழா, வைகாசி 10 நாள் பிரமோற்சவம், ஆவணியில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, புரட்டாசி சனிக்கிழமைகள், தனுர் (மார்கழி) மாத பூஜைகள், ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி போன்றவைகளோடு கீழேயுள்ள வேணுகோபாலர் ஆலயத்திலும் அனேக வைஷ்ணவ விசேஷகங்கள் சிறப்புற நடைபெறுகின்றன.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

வருடத்தின் முக்கிய விசேஷமாக...சித்ரா பௌர்ணமி அன்று கிழ்க்கோவிலில் உள்ள ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ நரசிம்மமூர்த்திக்கு சிறப்பு அபிஷேக அலங்காரம் செய்யப்பட்டு, ஐந்து கிலோமீட்டர் தொலைவிலுள்ள கரைப்பூண்டிக்குச் சென்று பெருமாள் தீர்த்தம் கொடுக்கும் தீர்த்தவாரி உற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது.

திருமணவரம், புத்திரப்பேறு, அரசு வேலை, கடன் நிவர்த்தி, தொழில் முன்னேற்றம் மற்றும் அமானுஷ்ய மாந்திரீக தொல்லைகளிலிருந்து விடுபட, பிரதி மாதம் பிரதோஷத்தன்று சம்பத்திரி ஸ்ரீ லட்சுமி நரசிம்மருக்கும், ஊரில் உள்ள ஸ்ரீ பாமா ருக்மணி சமேத வேணுகோபால சுவாமி மற்றும் உற்சவர் நரசிம்மருக்கும் திருமஞ்சனம் செய்து, துளசி மாலை சாற்றி, பானகம் மற்றும் வெல்லத்தினால் ஆன பட்சணங்களை நிவேதனம் செய்து, கிரிவலம் வந்து வழிபட்டு, உரிய பலன் பெற்றிடலாம்.

வைகானச ஆகம முறைப்படி பூஜைகள் நடந்திடும் இங்கு தினமும் கீழ் கோவில் நரசிம்மருக்கு நிவேதிக்கும் பானகத்தை பிரசாதமாக பருகிட, எல்லாவித ரோகங்களில் இருந்தும் விடுபடலாம்.


பிரதி சனிக்கிழமைகளில் அதிகாலை 4:30 மணி முதல் 6 மணி வரை மட்டுமே மலைக் கோவில் திறந்திருக்கும். அச்சமயம் சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகின்றன. ஊரில் உள்ள ஸ்ரீ வேணுகோபாலர் ஆலயம் தினமும் காலை 6:00 மணி முதல் 8:30 மணி வரையும், மாலை 5 மணி முதல் 8 மணி வரையும் திறந்திருக்கும்.

சம்பத்கிரியை கண்டு, வணங்கி, சகல செல்வங்களையும் பெற்றிடுவோம்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் நகரின் மேற்கில் அமைந்துள்ளது சம்பத்கிரி.

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.

e-magazine
aanmeegamalar.com




# Aanmeega Malar

## English magazine

## coming soon...

## covering all spiritual information

For more details
9444228203
(9 AM to 4 PM)

**Those who want to send spiritual messages please send them along with their photo and phone number**

# ‘கார்த்திகை திருவிழா’

# நொய்டா பிரிவு 62 கோவிலில் விளக்கு ஏற்றுதல்




நொய்டா, செக்டார் 62, ஸ்ரீ விநாயக ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில் ‘கார்த்திகை திருவிழா’வின் போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீபங்கள் ஏற்றப்பட்டன. தமிழகத்தில் உள்ள திருவண்ணாமலையில் விளக்குகள் ஏற்றப்பட்ட அதே வரியில்தான் விளக்குகள் ஏற்றப்பட்டன. இந்த சிறப்பு நாளில், ஸ்ரீ கார்த்திகேயருக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. கடும் பனிக்காலம் (4 டிகிரி) என கவலைப்படாமல் பக்தர்கள் திரளாக வந்து விழாவில் பங்கேற்றனர்.

கார்த்திகை தீபங்கள், குறிப்பாக தமிழ்நாட்டில் கலாச்சார மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த தீபங்களின் திருவிழா. இந்த திருவிழா சிவன் மற்றும் கார்த்திகேயருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, மேலும் இருளை அகற்றி ஒளி பரவுவதைக் குறிக்கும் வகையில் விளக்குகள் ஏற்றி கொண்டாடப்படுகிறது.



எஸ்.வெங்கடேசன்

மகா தீபாராதனையுடன் விழா நிறைவடைந்து பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. அனைத்து பூஜைகளையும் கோவில் பூசாரிகள்: மணிகண்டன் சர்மா, மோஹித் மிஸ்ரா மற்றும் பிரஹலாதன் ஆகியோர் செய்தனர்.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

e-magazine
aanmeegamalar.com

# இறைவனின் எண்ணத்தில் யார் உயர்ந்தவன்

சீடன்: இறைவனிடம் அடிமையாக இருக்கலாமா?

ஞானி: அது பக்தனின் அடையாளம்.

சீடன்: துன்பம் எப்பொழுது அழியும்?

ஞானி: அதன் மூலம் தெரியும்போது.

சீடன்: குரு என்பவன் யார்?

ஞானி: துன்பத்தைப் போக்காமல் துன்பத்தைப் போக்கும் வழியைக் காட்டுபவன்.

சீடன்: பிரார்த்தனைகள் எப்பொழுது வருகிறது

ஞானி: பருவம் தப்பிய காலங்களில் எண்ணும் எண்ணங்களில்.

சீடன்: எது ஆண்மையற்ற தன்மை?

ஞானி: வீரனுக்கு வரும் கலக்கம்.

சீடன்: எது அறிவு?

ஞானி: உயிர்வேறு உடல் வேறு என எண்ணுவது.

சீடன்: அறிவை எதற்கு உபயோகப்படுத்த வேண்டும்?

ஞானி: பலன் எதிர்பாராத கடமையைச் செய்ய.

சீடன்: அறிவு கடவுளைப் புறக்கணித்தால்?

ஞானி: உடலோடு ஒட்டிய ஆணவமும் கர்வமும் மிஞ்சும்.

சீடன்: அதனால் என்ன கெடுதல்?

ஞானி: தோல்வி வரும்போது அறிவு உன்னிடமிருந்து அகலும்.

சீடன்: உண்மையை அறிய என்ன செய்யவேண்டும்?

ஞானி: இறைவனை பற்றி படிக்க வேண்டும்.

சீடன்: உலகைக் கண்டு பயப்படுபவன் யார்?

ஞானி: கோழை. விவேகி அல்ல.

சீடன்: உலகில் உயர்ந்தவன் யார்?

ஞானி: கடமையை நிகழ்த்திய மனிதன்.

சீடன்: யார் உண்மையான விவேகி?

ஞானி: வாழ்வு என்ற குறுகிய வியாபாரக் காலத்தை உணர்ந்தவன்.

சீடன்: இறைவனின் எண்ணத்தில் யார் உயர்ந்தவன்?

ஞானி: கர்மம் என்ற தொழில் செய்யும் பாதையில் நடப்பவன்

சீடன்: அப்படியானால் தொழிலே தெய்வமா?

ஞானி: தன்னை முழுமையாக ஆட்படுத்திக் கொண்டால்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

சீடன்: மனிதனின் இயற்கை உணர்வு எது?

ஞானி: அழியாத உயிரின் நினைவு

சீடன்: கடவுளையே தொழிலாக நினைத்தால்?

ஞானி: முயலாமல் தவம் செய்யாமல் அவனே வளருவான்.

சீடன்: யார் கடவுளை அறியாதவன்?

ஞானி: வெறும் சொல்லினால் ஞானம் பேசுபவன்.

சீடன்: பலன்களை எதிர்ப்பார்க்காமல் இருந்தால்?

ஞானி: பற்று விட்டுவிடும்.

சீடன்: பற்று விட்டுவிட்டால்.

ஞானி: பயன் கிட்டிவிடும். கடவுளே வருவான்.




சீடன்: சற்று குழப்பமாக உள்ளதே?

ஞானி: (சிரித்தபடி) கேள்வி கேட்டே ஞானத்தை அடைய முடியாது. குருவிடம் சரணடை. மார்க்கம் புரியும்.

சீடன்: பூஜை என்றால் என்ன?

ஞானி: வண்டியை சரி செய்வது போன்றது.




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



e-magazine
aanmeegamalar.com

ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203


சீடன்: சாக்த மதம் என்றால் என்ன?
ஞானி: ஆக்க பூர்வ சக்தியை உள்ளடக்கி வைப்பது.
சீடன்: விரிவுரைகள் எதற்கு?
ஞானி: பக்தி வருவதற்கு. ஆழமாய் செல்வதற்கு.
சீடன்: கவிஞன் என்பவன் யார்?
ஞானி: முடிவைத் தருபவன்.
சீடன்: இயக்கம் எப்பொழுது துவங்குகிறது?
ஞானி: மனம் சிந்தனையோடு சேரும்போது.
சீடன்: மந்திரம் எப்பொழுது செயல்படுகிறது?
ஞானி: பராக்கிரமத்துடன் சொல்லும்போது.
சீடன்: சக்தி எப்பொழுது பிறக்கிறது?
ஞானி: விஷயத்தை ஈர்த்துக் கொள்ளம்போது.
சீடன்: எது புலம்பும்? எது புலம்பாது?
ஞானி: நியாயங்கள் புலம்பும். உண்மை புலம்பாது.
சீடன்: மதம் எதை போதிக்கிறது?
ஞானி: பயத்தை நாமே முயற்சி செய்து போக்க.
சீடன்: பயம் எப்பொழுது மறைகிறது?
ஞானி: அறிவு வெளிப்படும்போது.
சீடன்: தெய்வீகத்தின் மேன்மை என்ன?
ஞானி: மனிதனை மாற்றி மேல்நிலைக்கு அனுப்பும் பணி.
சீடன்: எதை அறுக்க வேண்டும்?
ஞானி: பற்றை அறுக்க வேண்டும்.
சீடன்: எதைப் பற்ற வேண்டும்?
ஞானி: பற்றுக் கோடான இறைவனைப் பற்ற வேண்டும்.
சீடன்: எது சமயம்?
ஞானி: இதயத்தில் திருப்தி வந்தால் அது சமயம்.
சீடன்: இறைவனை எப்பொழுது வணங்க முடியும்?
ஞானி: உன்னிடம் உள்ள குறைகளை உணரும்போது.
சீடன்: கடவுளைப் பார்க்க முடியாதது எதனால்?
ஞானி: அனுஷ்டானம், தெய்வீக ஒழுக்கம் இல்லாததால்.
சீடன்: மனிதனை எது வளர்க்கிறது?
ஞானி: குணம் மனிதனை வளர்க்கிறது.
சீடன்: வெற்றி எப்பொழுது கிடைக்கிறது?
ஞானி: வீரமும் விருப்பமும் ஒன்றாகும்போது.
சீடன்: கடவுளை நினைக்க எதைக் களைய வேண்டும்?
ஞானி: மனச் சலனத்தை.

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

அழகுராஜா

# மர்மங்கள் விலகாத இந்திய கோவில்கள்

இந்தியாவில் உள்ள கோவில்களில், 5 கோவில்கள் இன்னும் மர்மங்கள் நிறைந்ததாகவே உள்ளது. இன்றுவரை அந்த மர்மங்களுக்கு விடை கிடைக்கவில்லை. தஞ்சை பெரிய கோவில், பெங்களூரு காடு மல்லேஸ்வரர் கோவில், கேரளா பத்மநாத சுவாமி கோவில், குஜராத் ஸ்ரீ ஸ்தம்பேஸ்வரர் கோவில் மற்றும் ஆந்திராவில் உள்ள லேபாக்ஷி கோவில். இந்த கோவிலின் மர்மங்கள் இன்று வரை புதிராகவே இருந்து வருகிறது.

இந்தியா ஒரு ஆன்மீக நாடு என்பது மத நம்பிக்கை உள்ள அனைவருக்கும் தெரியும். இந்து மதத்தை பரப்புவதற்காக எத்தனையோ மகான்களும், ஆன்மிக பெரியோர்களும் இந்த பூமியில் அவதரித்துள்ளனர். அதே போல் அன்றைய காலத்தில், காலத்தால் அழியாத எத்தனையோ ஆலயங்களையும் கட்டி எழுப்பி இந்து மதத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

அந்த காலத்தில் கட்டப்பட்ட மிகபிரமாண்டமான கோவில்களைப்போல் இன்றையகாலத்தில் கட்ட முடியாமல் போனது ஆச்சரியமாகவே உள்ளது. கார ணம், எந்த விதமான தொழில்நுட்பமும் இல்லாத 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலங்களில் எப்படி இந்த மாதிரியான அதிசயிக்கத்தக்க வகையில் மிகப் பிரமாண்ட கோவில்களை கட்டி எழுப்பியுள்ளனர் என்பது இன்றைய ஆராய்ச்சியாளர்களுக்கே சவாலாக உள்ளது என்று சொல்லலாம்.

### இந்தியாவின் பிரம்மாண்டம்

பல நூற்றாண்டுகளுக்குமுன்பு எத்தனையோ வெளிநாட்டு மன்னர்களும், கொள்ளையர்களும், இந்தியர்களைப் பற்றியும், இங்குள்ள கோவில்களைப் பற்றியும் செவிவழிச் செய்தியாக கேள்விப்பட்டு, இந்தியாவின் மீது தொடர்ந்து படையெடுத்து வந்து இங்கிருந்த கோவில்களை பார்த்து ஆச்சரியப்பட்டு, கோவில்களில் இருந்த செல்வங்களை கொள்ளையடித்ததோடு, கோவில்களையும் இடித்து தரைமட்டமாக்கி துவம்சம் செய்து விட்டு சென்றதுண்டு.

### கொள்ளை போன கோவில் சொத்து,

அதிலும் குறிப்பாக முகமது கஜினி, தொடர்ந்து 18 முறை இந்தியாவின் மீது படையெடுத்து வந்து இங்கிருந்த செல்வங்களை எல்லாம் கொள்ளையடித்து சென்றான். 18ஆவது முறையாக இந்தியாவின் மீது படையெடுத்து வந்த போது, அவன் குறி வைத்தது ஒரே ஒரு கோவிலைத் தான். அதுதான் குஜராத்தின் புகழ்பெற்ற சோமநாதர் கோவிலைத் தான்.

### சோமநாதர் கோவில்

சோமநாதர் கோவிலைப் பற்றிய ஆச்சரியங்கள் உலகம் முழுவதும் தெரிந்திருந்தது. அதன் காரணமாகவே 17ஆவது முறை கஜினி முகமது இந்தியாவின்



e-magazine
aanmeegamalar.com

மீது படையெடுத்து வந்த போது அவன் குறி வைத்தது புகழ் பெற்ற சோமநாதர் ஆலயத்தை தான். அது ஏன் அந்த கோவிலின் மீது குறி வைத்தான் என்பது தானே உங்கள் கேள்வி.

### அதிசயமான கோவில்கள்

அன்றைய காலத்தில் இந்தியாவில் இருந்த கோவில்களில் மிகவும் பணக்கார கோவில் அது தான். ஒரே வரியில் சொல்வதென்றால், அவன் சோமநாதர் கோவிலில் இருந்து கொள்ளையடித்த தங்கத்தின் எடை மட்டும் 6 டன்னுக்கும் அதிகம். அதோடு, அந்த கோவிலில் இருந்த செல்வ வளத்தை தாண்டி இரண்டு ஆச்சரிய அதிசயங்கள் இருந்தன.

### புரியாத புதிர்

சோமநாதர் கோவில் கடற்கரையை ஒட்டிய கோவில் என்பதால், தினசரி காலையும், மாலையும் ஒரு பெரிய கடல் அலை ஒன்று எழும்பி சோமநாதர் கோவில் படிக்கட்டுகளை முத்தமிட்டு திரும்பும் என்பது தான். இன்றைய கட்டடக்கலை வல்லுநர்களுக்கு இது புரியாத புதிர் தான். மற்றொரு ஆச்சரியம் அந்த கோவிலில் கருவறை லிங்கம் தான். மற்ற கோவில்களில் இல்லாத அதிசயம் சோமநாதர் கோவில் லிங்கத்திற்கு இருந்தது. அந்த கோவில் கருவறை லிங்கம் மற்ற கோவில்களில் இருப்பதைப் போல் தரையில் அமைந்திருக்கவில்லை.

### மர்மம் நிறைந்த கோவில்கள்

அதற்கு மாறாக எந்தவிதமான பிடிமானமும் இல்லாமல் அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த கஜினி முகமது ஆச்சரியப்பட்டான் அதனால் தான் அதை உடனே இடிக்க முற்பட்டான் என்று



ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். சோமநாதர் கோவிலைப் போலவே இந்தியாவில் எத்தனையோ கோவில்களில் மர்மங்கள் நிறைந்துள்ளன. அவற்றுக்கு இன்று வரையிலும் அறிவியல் ரீதியாக பதில் கிடைக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும். இதில் ஐந்து கோவில்கள் மர்மங்களும், அதிசயங்களும் நிறைந்ததாகவே இருக்கின்றன.

### தஞ்சை பெரிய கோவில்

இதில் முதலாவதாக வருவது, தஞ்சை பெரிய கோவில். இது 1007ஆம் ஆண்டுகளில் ராஜ ராஜ சோழ மன்னனால் கட்டப்பட்டது. இந்திய கட்டடக்கலைக்க பெயர் பெற்ற கோவில் என்பதோடு யுனெஸ்கோவின் பாரம்பரிய சின்னங்களின் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தக் கோவில் கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்பட்ட கற்கள் அனைத்துமே சுத்தமான கிரானைட் கற்களாகும். கோவில் விமானமும் 80 டன் எடையுள்ள ஒரே கிரானைட் கல்லால் ஆனது.

### விலகாத மர்மம்

இதில் ஆச்சரியம் என்னவென்றால், இந்த கோவிலைச் சுற்றிலும் கிட்டத்தட்ட 60 கி.மீக்கு எந்த மலையோ அல்லது குன்றுகளோ கிடையாது. அப்படி இருக்கையில் எப்படி முழுக்க பெரிய பெரிய கிரானைட் கற்களைக் கொண்டு இந்த கோவில் கட்டப்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் மண்டை காய்கிறார்கள். இன்று வரையிலும் அதற்கான மர்மம் விலகவில்லை.

### குஜராத் கடல் கோவில்

அடுத்ததாக வருவது குஜராத் மாநிலத்தில் பரூச் மாவட்டத்தில் கவிகம்போய் என்ற சிற்றூரில் அரபிக்கடலில் கட்டப்பட்ட ஸ்ரீ ஸ்தம்பேஸ்வரர் கோவில். இதற்கு தினமும் மறையும் கோவில் என்றும் பெயருண்டு. இப்படி ஒரு கோவில் இருப்பதே 150 ஆண்டுகளுக்கு முன்புதான் வெளியுலகிற்கு தெரிய வந்தது. 150 ஆண்டுகளுக்கு முன்பு கடல் உள்வோங்கும் போது தான் இக்கோவில் இருப்பது தெரியவந்தது. இந்தக் கோவிலின் அதிசயம் என்னவென்றால், காலை வேளைகளில் முழுமையாக காட்சியளிக்கும். பின்பு மாலை முதல் இரவு வரையிலும் கடல் அலைகளால் கோவில் முழுவதுமாக மூழ்கடிக்கப்படும். அந்த அளவுக்கு கணகச்சிதமாக இந்த கோவிலை கட்டி முடித்துள்ளனர். இதை கட்டியது யார், எந்த ஆண்டு என்பது இன்று வரையிலும்

மர்மமாகவே உள்ளது.

## திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவில்

அடுத்ததாக நாம் காணவிருப்பது, கேரளா மாநில தலைநகரான திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள பத்மநாப சுவாமி கோவில். இந்த கோவிலைப் பற்றிய மர்மமும் இன்று வரை தொடர்கிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் 6 ரகசிய நிலவறைகள் திறந்து பார்க்கப்பட்டன. திறந்து பார்த்த உடனேயே அனைவரும் ஆச்சரியத்தில் வாய் பிளந்து நின்றுவிட்டனர். அந்த அறைகளில் இருந்தவை அனைத்துமே தங்க வைர, வைடூரிய ஆபரணங்கள் தான். அவற்றின் இன் றைய மதிப்பு கிட்டத்தட்ட 5 லட்சம் கோடி ரூபாய் ஆகும். திருப்பதி கோவிலின் சொத்து மதிப் பெல்லாம் பின்னுக்கு தள்ளப்பட்டுவிட்டது என்று சொல்லலாம். கடைசியாக உள்ள 7ஆவது அறை மட்டும் இன்னும் திறக்கப்படவில்லை.

## பொக்கிஷ குவியல்

அந்த அறை முழுவதும் கடினமான எக்கு இரும்பால் செய்யப்பட்டுள்ளது. அந்த கதவில் என்ன தான் தீவிரமாக ஆராய்ந்து பார்த்தாலும் கூட சிறு துளையைக் கூட காண முடியவில்லை. இந்த நிலவறையில் உள்ள சொத்துக்கள், இது வரை கண்டெடுக்கப்பட்ட சொத்து மதிப்பை காட்டிலும் 4 மடங்கு இருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. அதோடு இந்த அறையின் கதவை ரகசிய மந்திரத்தால் மட்டுமே திறக்க முடியும் என்றும் நம்பப்படுகிறது. ஆனால் மற்றொரு தரப்பினரோ, இந்த அறையில் தான் உலகம் அழியும் நாள் பற்றிய ரகசிய குறிப்பு உள்ளது என்றும் நம்புகின்றனர். இதனாலேயே இந்த கோவிலைப் பற்றிய மர்மம் இன்றும் தொடர்கிறது.

## ஆந்திரா லேபாஷி கோவில்

மற்றொரு அதிசயமான கோவில், ஆந்திர மாநிலம் அனந்தப்பூர் மாவட்டத்திலுள்ள அமைந் துள்ளது லேபாக்ஷி கோவில். சிவன், விஷ்ணு மற்றும் வீரபத்திரர் ஆகிய மூவருக்கும் ஒரே கோவிலாக அமைந்துள்ளது. இந்த கோவில் சிற்பக்கலைக்கு புகழ் பெற்ற கோவிலாகும். இந்த கோவிலின் அமைக்கப்பட்டுள்ள 70 தூண்களில் ஒரு



தூண் மட்டும் தரையை தொடாமல் அந்தரத்தில் தொங்கும் படி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான மர்மமும் விழகாமலேயே இருந்து வருகிறது.

## காடு மல்லேஸ்வரா கோவில்

கடைசியாக நாம் காண்பது, கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூருவின் வடமேற்கு பகுதியில் அமைந்ததுள்ள காடு மல்லேஸ்வரர் கோவில்.

இந்த கோவில் இருப்பதே 1997ஆம் ஆண்டு தான் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த கோவில் இருந்த நிலத்திற்கு அருகில் கட்டுமானத்திற்கு குழி தோண்டும்போது தான் கண்டு பிடிக்கப்பட்டது. முழுவதுமாக தோண்டிய போது தான், பெரிய அளவிலான கோபுரத்தோடு, குளத் துடன் கூடிய கோவில் இருப்பது தெரிய வந்தது.

## சிவனுக்கு நந்தி அபிஷேகம்

இந்த கோவிலில் நந்தியானது வழக்கமாக இருப்பதைப் போல் இல்லாமல், சிவலிங்கத்திற்கு முன்புறம் இல்லாமல், லிங்கத்திற்கு முன்புறம் சற்று மேற்புறத்தில் அமைந்துள்ளது. அதோடு, நந்தியின் வாயிலிருந்து எப்போதும் நீர் விழுந்து கொண்டிருக்கிறது. அந்த நீரானது நேராக சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்வது போல் அமைந்துள்ளது.

இந்த அதிசய காட்சியை பார்க்கவே தினந்தோறும் பக்தர்கள் படையெடுக்கின்றனர். லிங்கத்தின் மீது விழும் நீர் நேராக குளத்தில் சென்று கலக்கிறது. ஆனால் நந்தியின் வாயிலிருந்து விழும் நீர் எங்கிருந்து வருகிறது என்பது மர்மமாகவே இருந்து வருகிறது.

நடேஷ் கன்னா, கல்லிடைக்குறிச்சி
செல்: 9944284135



e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 180 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக கட்டணமும் இல்லை

பாருங்கள்... டவுன்லோடு செய்து படியுங்கள்...




eBook FREEDOWNLOAD

## aanmeegamalar.com




தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# அஷ்டமாசித்துக்களும், அதன் விளக்கமும்

### அணிமா

பெரிய ஒரு பொருளை தோற்றத்தில் சிறியதாகக் காட்டுவது/ஆக்குவது. ப்ரிங்கி முனிவர் முத்தேவர்களை மட்டும் வலம் வருவதற்காக சிறு வண்டாக உருமாறினார் என்ற செய்தி அணிமா என்ற சித்தைக் குறிக்கும்.

### மஹிமா:

சிறிய பொருளைப் பெரிய பொருளாக்குவது. வாமன அவதாரத்தில் திருமால் இரண்டடியால் மூவுலகை அளந்ததும், க்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு உயர்ந்த வடிவம் காட்டி உலகமே தன்னுள் அடக்கம் என்று காட்டியதும் மஹிமா என்னும் சித்தாகும்.

### லஹிமா:

கனமான பொருளை இலேசான பொருளாக ஆக்குவது. திருநாவுக்கரசரை சமயப் பகை கார ணமாக கல்லில் கட்டி கடலில் போட்டபோது கல் மிதவையாகி கடலில் மிதந்தது லஹிமா ஆகும்.

### கரிமா:

இலேசான பொருளை மிகவும் கனமான பொருளாக ஆக்குவது. அமர்நீதி நாயனாரிடம் கோவணம் பெறுவதற்காக இறைவன் வந்த போது, ஒரு கோவணத்தின் எடைக்கு தன்னிட முள்ள எல்லா பொருட்களை வைத்தும் தராசுத் தட்டு சரியாகாமல் கடைசியாக தானும் தன் மனைவியும் ஏறி அமர்ந்து சரி செய்த சித்தி கரிமா.

### பிராத்தி:

எவ்விடத்திலும் தடையின்றி சஞ்சாரம் செய்வது. திருவிளையாடற்புராணத்தில் “எல்லாம்வல்ல சித்தரான படலம்“ என்னும் பகுதியில் சிவன் ஒரே சமயத்தில் நான்கு திசைகளிலும் காட்சியளித்ததாக வரும் சித்தி பிராத்தி.

### பிரகாமியம்:


வேண்டிய உடலை எடுத்து நினைத் தவரிடத்தில் அப்போதே தோன்றுதல். அவ்வையார் இளவயதிலேயே முதுமை வடிவத்தைப் பெற்றதும், காரைக்கால் அம்மையார் தன்னுடைய அழகான பெண்வடிவத்தை மாற்றி பேய் வடிவம் பெற்றதும் பிரகாமியம் என்னும் சித்தாகும்.

### ஈசத்துவம்:

ஐந்து தொழில்களை நடத்துதல். திரு ஞானசம்பந்தர் பூம்பாவைக்கு உயிர் கொடுத்து எழுப்பியமை ஈசத்துவம் எனும் சித்தாகும்.


### வசித்துவம்:

ஏழுவகைத் தோற்றமாகிய தேவ, மானிட, நரக, மிருக, பறப்பன, ஊர்வன, மரம் முதலியவற்றைத் தம்வசப் படுத்துதல். திருநாவுக்கரசர் தம்மைக் கொல்வதற்காக வந்த யானையை நிறுத்தியதும், ராமர் ஆலமரத்திலிருந்து ஒலி செய்து கொண் டிருந்த பறவைகளின் ஓசையை நிறுத் தியதும் வசித்துவம் எனும் சித்தாகும்.



# தமிழகமெங்கும் சிறப்பாக வெளியிடப்பட்ட
# ஆன்மிகமலர் காலண்டர்கள்







- சென்னை ஆன்மிக மலர் டிரஸ்ட் சார்பில் ஆண்டு தோறும் ஆன்மிக அன்பர்களிடம் பெரும் வரவேற்ப்பை பெற்ற ஆன்மிக மலர் காலண்டர்களை மதுரை ஆதினம் வெளியிட்டு ஆன்மிக சேவையில் சாதனை படைக்க பாராட்டி ஆசி வழங்கினார்.
- சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சியில் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி அதிகாரிகள் அலுவலர்களுக்கு மானாமதுரை முன்னாள் எம்எல்ஏ நகராட்சி தலைவர் திரு எஸ். மாரியப்பன் கென்னடி அவர்கள் ஆன்மிக காலண்டர்களை வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார்.
- சென்னை விருகம்பாக்கம் ஸ்ரீ ஜானகி டூர்ஸ் நிறுவனத்தினர் ஆன்மிகமலர் காலண்டர்களை பக்தர்களுக்கு வழங்கினார்.

e-magazine
aanmeegamalar.com

e-magazine
aanmeegamalar.com





- நொய்டாவிலுள்ள பழமையான கோயில்களில் ஒன்றான ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயிலில் 11 ஜனவரி 2025 அன்று ஆன்மீகமலர் நாட்காட்டி விநியோகிக்கப்பட்டது. இந்தக் கோயிலை வேதிக் பிரச்சார் சன்ஸ்தான் (VPS), நொய்டா நிர்வகித்து வருகிறது.
- வேதப் பிரச்சார் சன்ஸ்தான் நிர்வாகத்தின் கீழ், பிரிவு 62, பிளாட் C-30/2, நொய்டா மெட்ரோ நிலையம் அருகிலுள்ள விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில் ஆன்மிகமலர் காலண்டர் பக்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.
- சென்னை, வடபழனி முருகன் கோவில், மற்றும் வடபழனி முருகன் கோவிலை அமைக்க காரணமாக இருந்த சித்தர்கள் மூவரின் ஜீவ ஒடுக்க சமாதியில் ஆன்மிகமலர் காலண்டர் விநியோகிக்கப்பட்டது. பக்தர்கள் மிகுந்த ஆவலுடன் பெற்றுச் சென்றனர்.

- மானாமதுரை ஸ்ரீ சுந்தர விநாயகர் கோவிலில் சிறப்பு பூஜை நடத்தப்பெற்று ஆன்மிக மலர் காலண்டர்கள் பக்தர்களுக்கு ஸ்தபதி சண்முகம் அவர்கள் கோவில் நிர்வாகி முன்னாள் ராணுவ வீரர் பிரசாத் அவர்கள் ஆகியோர் வழங்கி னார்கள்.
- சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூர் இடைக்காடார் சித்தர் கோவில் மானா மதுரை ஸ்ரீ சிருங்கேரி சங்கர மடம் ஆகிய இடங்களில் ஆன்மிக மலர் டிரஸ்ட் காலண்டர்கள் வழங்கப் பட்டது.
- சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டிக்குளம் கருப்பனேந்தல்மடம் தவதிரு சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகள் முதல் ஜீவ ஒடுகத்தில் பக்தர் களுக்கு ஆன்மிக மலர் காலண்டர்கள் வழங்கப்பட்டது.
- செம்பாக்கம் பால திரிபுரசுந்தரி பீடம், ஸ்ரீபாலா சமஸ்தானத்தில் பக்தர்களுக்கு ஆன்மிகமலர் காலண்டர்கள் வழங்கப்பட்டது.











**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 176 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக கட்டணமும் இல்லை

பாருங்கள்... டவுன்லோடு செய்து படியுங்கள்...



aanmeegamalar.com



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com